
சிறிய/பாரிய கைத்தொழில் மாத இதழ்

ரூபா 50/=



+x

# லங்கா டுடே


ලංකා ටුඩේ

Lanka Today

August '98

## Who are these?

Who are these?
Who are these?
Who are these?



ஜூன் 15 முதல் 19 வரை இவர்கள் ஸ்ரீ லங்கா வந்து சென்றதன் மர்மம் என்ன?

ECoSTAT



Mini Incubator மூலம் சுய தொழில் வாய்ப்பு...



ரூபா 10,000/- முதலுடன் வீட்டிலிருந்தே சம்பாதிக்க இலகுவான வழி சொல்கிறார் Mr. Traver

WCS வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MODERN

# MODERN ENGINEERING WORKS

## SPECIALIST FOR STEEL FURNITURE

LIBRARY & INDUSTRIAL SHELVING OFFICE EQUIPMENTS

Head office & factory : No. 444, Galle Road, Rathmalana. Tel: 717710, 725408 Fax: 725388

SHOWROOMS: No. 55, Mihidu Mawatha, Colombo 12. Tel: 334087, 341642 Fax: 433362
No. 149, Galle Road, Pallimulla, Panadura.
No. 357, 4th Mile Post, Peliyagoda. Tel: 071 - 22706

### OFFICE TABLE

SET — 60x30x30 Rs: 7500/-

SET — 60x36x30 Rs: 7250/-

JET/D — 54x30x30 Rs: 6100/-

50x30x30

JET — 50x30x30 Rs: 5500/-

OT/D — 36x18x30 Rs: 3250/-

CT — 46x24x30 RS: 4290/-

CT — 48x30x30 Rs: 4500/-

OT/D — 36x24x30 Rs: 3575/-

46x24x30

OT — 36x24x30 Rs: 3265/-

42x24x30

36x24x30

36x24x30
36x18x30

### OFFICE FURNITURE

OC 3 S — 3. Shelves Welded Rs: 5250/-

GLASS CUP JUNIOR — 2. Shelves G/Doors Rs: 5500/-

JC 2 S — 2. Shelves Rs: 4200/-

4 DRFC

OC 2 D — 3. Shelves 2 Dr Rs: 6400/-

Drawer Filing 5250/-

OC 1 D — 3. Shelves 1 Dr Rs: 6200/-

3 DRFC — 3. Drawer Filing Rs: 4600/-

2 DRJC — 2. Drawer Filing Rs: 3750/-

GLASS CUP — Top 2. Shelves, Sliding G/Doors, Bottom 2. Shelves, Sliding Door Rs: 7750/-

Computer Table — 4' x 2 1/2' Rs: 4950/-

### FACTORY FURNITURE

WORKMAN LOCKER — 12. Compartments

FILE RACK

WORKMAN LOCKER — 25. Compartments

FILE RACK — 04. SHELVES Rs: 5000/-

CASH BOX — Small Rs: 750/-, Large Rs: 850/-

### HOUSE HOLD FURNITURE

WLD/B/M 6' X 4' — Rs: 8690/-

CH.OVAL — Rs: 4850/-

CH. Normal — 1. Dr. 1. Cup Rs: 3950/-

WLD/M — 6' x 3' Rs: 7150/-

DRESSING TABLE — Rs: 4500/-

OC 2 D/M 6'x3' — Rs: 6750/-

BOOK RACK — 4' x 4' x 10" Rs: 1850/-

OC 1 D/M 6' x 3' — Rs: 6500/-

DINING TABLE — Rs: 2750/-

JC 2 D — 4' x 3' Rs: 4500/-

FOLDING BED

CHAIRS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா டுடே

**வாழ்வதற்கு பொருள் வேண்டும்.**
**வாழ்வதிலும் பொருள் வேண்டும்.**



**பிரதம ஆசிரியர்**
அலியார் மவ்சூக்

**ஆசிரியர் குழு**
திரு S.K. அமர்நாத்
ஜனாப் முஹம்மட் அலி
திரு R.R.K
ஜனாபா மஸீனா
செல்வி ஜனார்த்தனி
திரு ஆண்டியப்பன்

**வடிவமைப்பு**
ஹில்மி - Mastercratf

**விளம்பர நிர்வாகம்**
J.N.N.

**விநியோக மேலாளர்**
ராமக்குட்டி

**பொது மேலாளர்**
வெங்கடாசலம்

**அலுவலக நிர்வாகம்**
ஜோ - பொன்னையா
அஸ்வர் கான்



**Regd. Office :**
No. 120 - 6/2,
Top Floor,
Hassen Building,
Kandy Road,
Mawanella,
Sri Lanka.

**Working Office :**
No. 69/9,
Senanayake Avenue,
2nd Lane, Nawala,
Rajagiriya,
Sri lanka.
T.P/Fax : 01-877991
E-mail : wcsc @slt.lk



**கௌரவ ஆசிரியர்**
இரா. இராமமூர்த்தி


# எழுதுங்கள்


உங்களுக்கு எழுதும் ஆற்றல் இருந்தால் எமக்கு எழுதி அனுப்புங்கள், தரத்திற்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.

தொழில், வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி தொழில்நுட்பம், பங்குச்சந்தை, விற்பனைவரி, வருமானவரி, தொழில் அதிபர்கள், கடின உழைப்பாளர்களின் திறமைகள் செய்திகளை பேட்டி கண்டு எழுதலாம்.

உங்களது அல்லது உங்களுக்குத் தெரிந்த நிறுவனங்கள் அறிமுகப்படுத்தும் புதிய பொருட்கள், புதிய இயந்திரங்கள் பற்றி எழுதலாம்.

உங்கள் தொழிலில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், தடங்கல்களையும், மற்ற தொழில் ஆர்வமுள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.


உங்கள் பகுதியில் தொழில், வியாபாரங்கள், முயற்சியகள் சம்பந்தமாக நடைபெறும் கூட்டங்கள், கருத்தரங்குகள், பொருட்காட்சிகள் பற்றி தொகுத்து, புகைப்படம் எடுத்து அனுப்பலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் வந்த வழி...



பத்திரிகையா அய்யய்யோ வேண்டாம் அந்த வம்பு. ஆனானப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் பணத்திமிங்கிலங்களுக்கும் "டாட்டா" காட்டியது அத்துறை. அதில் போய் மூக்கை நுழைத்து இருப்பதையும் கெடுத்துக் கொள்ளாதே என்றன வலது கரங்கள்.

மாதங்கள் எட்டு ஓடியது. மனதுக்குள் நிஜங்கள் நிழலாடிக் கொண்டே இருந்தன. தாகம், தாகம் தாகம் நாம் கற்றதை, கண்டதை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற வெறி தனியாகவே பத்திரிகை வெளியிட வைத்தது.

பெண்களை அரை நிர்வாணமாக காட்ட முடியாது, கற்பனையில் அரசியல் கதை எழுத முடியாது, அதிரடி விளையாட்டுச் செய்திகளும் இல்லை. ஜே.ஜே. சில குறிப்புகளில் கவிதைகளையும் திருடி எழுத முடியாது. வன்னிக் காட்டுக்குள் இருக்கும் அந்த நபரைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டவும் முடியாது.

இவ்வளவு வில்வித்தைகளையும் தாண்டி கொச்சிக்காய், வெங்காயம், புடவை, புன்னாக்கு, கடலட்டை, கருவாடு, மீன், இறைச்சி, ஏற்றுமதி, இறக்குமதி, இயந்திரம், உற்பத்தி என கூறிக்கொண்டு ஒரு பத்திரிகை வருவதா!

பத்திரிகை வந்துவிட்டது. 6'x6' W.C.S. காரியாலயத்திற்குள் "லங்கா டுடே" இதழ்களை அடுக்கியும் ஆயிற்று. இனி யுத்தம் தொடங்கியது. யாருக்கு! எப்படி!! இப்புத்தகங்களை விற்பது. அதில் மூன்று நாள் கழிந்தது. நாலாம் நாள் இரு இளைஞர்களை அழைத்து ஆளுக்கு 100 புத்தகங்களைக் கொடுத்து ஒருவரை அக்குறணைக்கும், மற்றவரை கொழும்புக்கும் அனுப்பி வைத்தோம். மூன்று நாள் டைம். 50 ரூபா விலையில் விற்க வேண்டும். ஒன்றுக்கு 10 ரூபா கமிஷன் வழங்கப்படும். கையில் ஆளுக்கு 500 ரூபா பணமும் கொடுத்து ரொம்ப ஆச்சரியக்குறிகளுடன் அனுப்பி வைத்தோம்.

அன்று பிற்பகலே இருவரும் திரும்பினர்! வெறும்கையுடன்!! இருக்கும் இதழ்களை தங்களுக்கே தர வேண்டும் என கூறிக்கொண்டு இருவரும் முண்டியடித்தனர். ஆம். வியாபாரம் களைகட்டிவிட்டது. இதுவரை எமக்குத் தரமான சரக்கு கிடைக்கவில்லை அதனால், சந்தையில் கிடைப்பதை நுகர்ந்தோம். நீங்கள் தரமானதைத் தாருங்கள் நாம் நுகர்ந்து தள்ளுகின்றோம் என கூறிக்கொண்டு வாசகர்களும், உழைப்பாளர்களும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கடுகன்னாவையைச் சேர்ந்த சுமதிபால என்பவர் எமது அலுவலகத்துக்கே நேரடியாக வந்து இதைச் சிங்களத்தில் வெளியிடுங்களேன் என பிடிவாதமாக நின்றார். இன்னும் 40 க்கு மேற்பட்ட டெலிபோன் விசாரிப்புகளும், 85க்கு மேற்பட்ட கடிதத் தொடர்புகளும், 100 க்கு மேற்பட்ட ஆதரவுச் செய்திகளும் கிடைத்தாயிற்று. ஆம் லங்கா டுடே இந்த 200 பேருக்காகவாவது தொடர்ந்து வரும். இம்மாதம் முதல் தமிழில் மற்றுமன்றி சிங்களத்திலும் வெளிவரும்.

மேலும், இதன் விலையைக் குறைக்க முடியாதா என நிறையப்பேர் கேட்டனர். முயற்சியாளர்களே! இப்பத்திரிகை அரச சார்பற்ற நிறுவனங்களிடம் பணம் பெற்றோ, அரச தனியார் வங்கிகளில் கடன் பெற்றோ, அந்தக் கட்சியையும் தலைவனையும் தாக்கி எழுதுகின்றேன் நீங்கள் எவ்வளவு தருவீர்கள் என இன்னொரு கட்சித் தலைவரிடம் பேரம் பேசியோ ஆரம்பிக்கப்பட்டதல்ல. இது தனி ஒரு மனிதனின் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. மனைவியின் தாலிக்கொடி, பிள்ளைகளின் காதுப்பூ, கை வளையல், அடுத்தவீட்டு பணக்காரரிடம் 40,000/= ரூபா கடன் என பணம் திரட்டி ஆரம்பித்தது. ஆகவே, விலை ஒருகாலும் குறையாது. ஆனால், எதிர்காலத்தில் பக்கங்கள் கூடும், தகவல்கள் குவியும். இது உறுதி.

E.D.B. டெபியுடி டிரக்டர் (Deputy Director) திரு லயனல் ஜயசிங்க, சீமெந்துக் கூட்டுத்தாபன ஜெனரல் மனேஜர் திரு. பொன்னம்பெரும, IRDP அஸிஸ்டன்ட் புரொஜக்ட் டிரக்டர் (கேகாலை) திரு. குனதிலக, இன்ஜினியர் ஜனாப் காலித் (கட்டார்) என ஐந்து சதத்துக்கும் அடிபணியாத மனித தெய்வங்களின் ஆலோசனையுடன் ஆரம்பிக்கப்பட்டது எமது நிறுவனம். ஆகவே, இவர்களின் துணையுடன் எமது "லங்கா டுடே" நல்லதை, தரமானதை, இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானதை தொடர்ந்து அள்ளித்தரும்.

சீரழிந்து கிடந்த சீனத்தைச் சிவப்பாக்கி, டாலர் மழை பொழியும் அமெரிக்காவையே எதிர்த்து நிற்கும் ஆற்றல் படைத்த வல்லரசு நாடாக்கிய சீனத்து விவசாயி மகன் "மா ஓ சேதுங்" உங்களுக்கு படிப்பினையாக இருக்கட்டும். அவன் சிவப்பாக்கினான், நாம் செழிப்பாக்குவோம். ஓ.கே.

ஆசிரியர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டை அடைகாக்கும் இயந்திரம் INCUBATOR

எமது நாட்டின் தற்போதைய நிலையில் ஒவ்வொரு மனிதனும் தனது மேம்பாட்டிற்காக அயராது பாடுபடுகின்றான். ஒவ்வொருவரும் தமது வசதிக்கு ஏற்ப முயற்சிகளில் ஈடுபடுவதையே பெரிதும் விரும்புகின்றனர். தனது நிலைக்கு மேலான முயற்சியில் ஈடுபட்டு உள்ளதையும் அழித்துக் கொள்ள எவரும் விரும்புவதில்லை. அநேகமானோர் தமக்குரிய முன்னேற்ற வழி எது எனத் தெரியாமலும், அதை அறிந்து கொள்ள முயற்சிக்காமலும் வெறுமனே மன உளைச்சலுடன் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு வழி காட்டவும் அவர்கள் தம் வாழ்வை மேம்படுத்தவுமே இந்த அடைகாக்கும் கருவியைத் தருவித்தோம்.

## முட்டை அடைகாக்கும் சிறிய சாதனம் (MINI INCUBATOR)



மினி இன்குபேட்டர் என்பது இங்கிலாந்து நாட்டில் வெள்ளையர்களால் வடிவமைக்கப்பட்ட கோழிக்குஞ்சு பொரிக்கும் இலகு இயந்திரம். உங்கள் வசதி விருப்பத்திற்கு ஏற்ப உங்கள் வீடுகளில் இருந்து கொண்டே மிகச் சிறிய முதலீட்டுடன் சுய தொழில் முயற்சியில் ஈடுபடக் கூடிய எளிய வடிவமைப்பையும் தொழில் நுட்பத்தையும் கொண்ட இவ்விலகு சாதனம் பற்றி மூன்று கட்டங்களாக நோக்குவோம்.

## 1. முதலீடு

சாதாரண மகனும் துணிச்சலுடன் இறங்கி பாரிய வெற்றிகளைக் குறிக்கும் வண்ணம் மிகக் குறைந்த பணத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய இவ் இயந்திர சாதனத்தின் விலை வெறும் 10,000 ரூபாய் மட்டுமே. இன்றைய காலத்தில் வெளிநாட்டுப் பொருட்களின் விலைவாசியின் மத்தியில் பிரித்தானியாவில் முழுக்க முழுக்க வடிவமைக்கப்பட்டு அதன் சேவைக்காலம் உறுதிப்படுத்தப்பட்டு உங்கள் வீட்டு வாசலுக்கே மேற்குறித்த விலையில் கிடைக்கிறதென்றால் முதலீட்டின் இலகுத்தனத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

## 2. பயன்பாடு

கோழிக் குஞ்சு பொரிக்க வைக்க மினி இன்கியுபேட்டர் ஐ வாங்குவதன் மூலம் வீட்டிலிருந்து கொண்டே உங்கள் மற்றைய வேலைகளின் மத்தியிலும் செயற்படலாம். நீங்கள் முதலிடும் ரூபா 10.000 ஐ மூன்றே மூன்று மாதங்களில் மீளப் பெற்றுக்கொள்ளும் வகையிலேயேதான் இதன் செயற்பாடு அமைந்துள்ளது. 100 முட்டைகளை அடைவைக்கும்போது அவற்றுள் 86 முட்டைகளே சராசரியாகப் பொரிக்கும் என்ற கணக்கீட்டு முறையிலேயேதான் முதலீட்டை மூன்று மாதங்களில் பெறமுடியும் என்ற உத்தரவாதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எம்மவர்களின் அதீத திறமை, ஊக்கம், முயற்சி என்பனபற்றி நாம் அதிகம் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஒருவருக்கென வடிவமைக்கப்பட்ட சைக்கிளில் மூவர் செல்வதும், இருவருக்காக உருவாக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் நால்வர் செல்வதும் என எத்தனையோ சாதனைகளைக் கூறலாம்.




முட்டையை எப்படியும் வைக்கலாம் என்பது இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.


இதுபோன்ற சரியான அனுகுமுறை செயற்பாடுகளால் பொரிக்கும் வீதமும் உச்சமானதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தொழில்நுட்பம்

தொழில்நுட்பத்தை எடுத்துக்கொண்டால் இது ஓர் இலகு தொழில்நுட்ப அமைப்பைக் கொண்டது. சாதாரண மகனும் மிக எழிதாக விதிகளை அவதானித்து இயக்கிப் பயனடையும் வகையில் எளிமையாக வடிவமைக்கப்பட்ட ஓர் சாதனம் இது என்றால் மிகையாகாது. பொதுவாகவே ஆங்கிலேய நாட்டுத் தயாரிப்புகளுக்கு எம்மத்தியில் கிராக்கி, மவுசு அதிகம் என்பது எல்லோரும் அறிந்ததொன்றே. வெள்ளையர்களினால் எம்மூதாதையர் காலத்தில் வடிவமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு விடப்பட்ட கார்கள், மோட்டார் சைக்கிள்கள், போன்றன இன்றும் நவநாகரிக உலகில் மிகவும் பெருமையுடன் பயன்படுத்துவதைக் காணலாம். இங்கிலாந்து தயாரிப்புகளுக்கு அவர்கள் ஒரு வருட உத்தரவாதம் கொடுக்கின்றார்கள் என்றால், அது எம்வரையில் 10, 15 வருடங்களுக்கும் மேலான உத்தரவாதம் என்பதை பல சமயங்களில் நாம் கண்ணோக்கியுள்ளோம்.




முட்டையைப் பெட்டியில் வைத்து 9வது நாள் முதல் இந்த டோர்ச் ஊடாக குஞ்சின் அசைவைப் பார்க்கலாம்

இங்கே குறிப்பிடப்படும் MINI INCUBATOR என்பது முற்று முழுதாக கிராமிய கைத்தொழில் முறய்சிக்கு என வடிவமைக்கப்பட்டதினால் இதன் பயன்பாடு உச்சம். எந்த உட்பிரதேசங்களுக்கும் இலகுவில் எடுத்துச் செல்லக்கூடியதும், சாதாரண கார் பற்றரியில் இயங்கக்கூடியதுமான தொழில்நுட்பம். இந்தச் சாதனத்தை இயங்கவைக்க ஆறு வோல்ட் மின்சாரம் போதுமானது. இதுதவிர இடையில் ஒரு நாளுக்கு ஒரு தடவையோ அன்றி 4, 5 நாட்களுக்கு ஒரு முறையோ 8 மணித்தியாலங்களுக்கு மேற்படாத மின் தடை ஏற்படுமிடத்து முட்டைகளுக்கோ, குஞ்சுகளுக்கோ எந்தத் தீங்கும் ஏற்படாதவகையில் பிளாஸ்ரிக்கினால் அரண் செய்யப்பட்டுள்ளது. இதை உபயோகப்படுத்தி பயன்பெற விஷேட பயிற்சிகளோ செற்முறைகளோ அவசியமில்லை. இந்தச் சாதணத்துடன் வழங்கப்படும் கையேட்டைக் கவனமாகப் படித்து ஆர்வத்துடன் செயற்பட்டால் போதுமானது.

## உச்ச பயன்பாட்டுக்கான வழிவகைகள்

உச்ச பயன்பாடு என்பது இங்கு குறிக்கப்பட்ட வீதாசாரத்தையும்விட அதிகரித்த பயன்பாடு பெற்றுக்கொள்வதைக் குறிக்கும். முட்டைகள் பொரிக்கும் அளவும் திறனும் எம் தெரிவுகளிலேயே தங்கியுள்ளது. பொரிக்க வைக்க முட்டைகளைத் தெரிவு செய்யும்போது பிரதானமாகக் கவனிக்க வேண்டியவையாவன:

I. ஐந்து நாட்களுக்கு மேற்படாத முட்டைகளையும் (சில சமயங்களில் உஷ்ணம் அதிகமாகக் காணப்பட்டால், மூன்று நாட்களுக்கு உட்பட்டவையைத் தெரிவு செய்தல் மிக நன்று) மிகச் சுத்தமான, ஒன்றோடொன்று தொடர்பில்லாத வேற்றுக் கோழிகளிலிருந்து பெறப்பட்ட முட்டைகளையும் தெரிவு செய்தல்.

II. புதிதாக முட்டையிடத் தொடங்கிய கோழிகளில் (கன்னிக்கோழி) இருந்தோ அல்லது குறிக்கப்பட்ட காலம் முட்டையிட்டு வயதுபோன கோழிகளிலிருந்தோ அல்லது வயது அதிகமான சேவல்கள் சேர்ந்த கோழிகளின் முட்டைகளையோ, ஒரு சேவலுக்கு பத்துக்கு மேற்பட்ட பேடுகள் சேர்ந்த முட்டைகளையோ தெரிவு செய்யக்கூடாது. இவை பொரிக்கும் திறன் மிகக் குறைந்தவையாகவே இருக்கும்.

III. அளவில் சிறியவையானதையோ அன்றி அதிகம் பெரிதான முட்டைகளையோ தெரிவு செய்யாது சாதாரண அளவுகளையே தெரிவு செய்ய வேண்டும்.


இவை தவிர இடத்துக்கிடம் இனங்களிலும் தேவைகளிலும் மாற்றமிருக்கும். உங்கள் இடத்தில் என்ன இனத்துக்கு கிராக்கி அதிகம் இருக்கின்றது என்பதை அறிந்து செயல்படுவதும், என்ன தேவை அதிகரித்துக் காணப்படுகின்றது., முட்டைக்கான கோழிகளா அல்லது இறைச்சிக்கான கோழிகளா என்பதை அவதானித்து அதற்கேற்ப செயல்படல் என்பன உச்சப் பலாபலனுக்கான வழிவகைகளாக அமையும்.

முட்டைகளை அடைவைக்க வாங்கும்போது நல்ல இனங்களை வாங்கி அவற்றைப் பொரிக்க வைத்து சிறிய அளவில் 20 – 25 வரையான குஞ்சுகளை தெரிவு செய்து சேவல்களுடன் சேர்த்து நீங்களே வளர்க்குமிடத்து தரமாக மலிவாக தொடர்ச்சியாக முட்டைகள் உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கும். தவிர அடைவைக்க முட்டைகளை அதிகரித்த விலையில் விற்கவும் முடியும்.

இதுதவிர இந்த மினி இன்கியுபேட்டர் சாதனத்தில் கோழி முட்டைகளை மாத்திரமன்றி தாரா, வான்கோழி, மயில், புறா, கிளி இன முட்டைகள் என பலவகையானதையும் பொரிக்க வைக்கலாம். (அதன் செய்முறை அட்டவனையைத் தெரிந்திருத்தல் அவசியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பெட்டியில் இணைக்கப்பட்டுள்ள கண்ணாடி வழியாக தினமும் முட்டையை அவதானிக்கலாம்.

மேல் குறித்த யாவற்றையும் நன்கு அவதானித்துச் செயற்பட்டால் ஆரம்பத்தில் ஒரு மினி இன்கியுபேட்டர் சாதனத்துடன் தொடங்கிய உங்கள் முயற்சி குறுகிய காலத்துக்குள் வளர்ச்சியடைந்து பலசாதனங்களை வாங்கி, விஸ்தரித்து நீங்கள் ஓர் தொழிலதிபர் ஸ்தானத்துக்கு வந்துவிடுவீர்கள் என்றால் மிகையாகாது.

## உபயோகிக்கும் முறை

மேலே கூறிய விடயங்கள் யாவற்றையும் நன்கு படித்து அவதானித்துக் கொண்டதன் பின் செய் முறையில் ஈடுபடலாம்.

(A) தெரிவு செய்த முட்டைகளை தட்டுகளில் அடுக்கி INCUBATOR சாதனத்திநுல் வைத்து இயக்க வேண்டும்.

(B) முட்டைகளைப் பொரிக்க வைத்த தினத்தை குறித்து வைத்துக்கொள்வதுடன் ஒரு நாளுக்கு குறைந்தது இரண்டு தடவைகள் முட்டைகளை திருப்பி விடுதல் வேண்டும். முட்டையின் எதிர் பக்கங்களில் அடையாளம் இட்டுக் கொள்வதினால் முட்டைகளை திருப்பி விடும் போது அடையாளம் உபயோகமாக இருக்கும்.

(C) 18 ஆவது நாளில் திருப்பிவிடுவதை நிறுத்தவும் கோழி முட்டைகள் 21 ஆவது தினத்தில் பொரிக்கும்.

(D). பொரித்த குஞ்சுகளை மேலதிகமாக 24 மணிநேரம் பொரிக்க வைத்த சாதனத்துள் விட்டு குஞ்சுகள் பூரணமாக இறகுகள் காய்ந்து உலர்ந்த பின்னரே அவற்றிற்குரிய கூட்டுக்குள் மாற்ற வேண்டும்.



21ம் நாள் முட்டைக்குள்ளிருந்து வெளியுலகிற்கு

*ஏற்றுமதி செய்து பணம் உழைக்க உங்களுக்கும் ஆசையா? ? ? ? ? ? ? ,*

**எதை ஏற்றுமதி செய்யப் போகிறீர்கள்!**
**ஏற்றுமதி செய்ய உள்ள சட்டதிட்டங்கள் என்ன!**
**ஏற்றுமதித் துறையிலுள்ள சகல நெளிவு சுளிவுகளையும் ஏற்றுமதித் துறை வள்ளுனர்கள் நீங்கள் சொல்லுமிடத்துக்கு சனி, ஞாயிறுகளில் வந்து புரிய வைப்பார்கள்.**

*கட்டணம் அறவிடப்படும்.*

*தொடர்புகளுக்கு:* **திரு. கே.ரீ.**
**லங்கா டுடே**

**வியாபாரிக்கு இது அழகு!**
**வேண்டியவர்களிடமும், பணியாளர்களிடமும் காட்டுகின்ற கோபம், வீரம் 'திறமை' என்ற சந்தையிலே விலை போகாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கறித் தோட்டம் பற்றிய சில உண்மைகள்

காய்கறித் தோட்டத் தயாரிப்பாளர்களுக்கு இருக்க வேண்டியவை:

1. எப்போதும் சுறுசுறுப்பு.
2. தோட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்வதில் கூரிய கண்ணோட்டம்.
3. பிரச்சினைகளைக் களைவதில் ஆர்வம்.
4. பிரச்சினைகள் ஏற்படாதவண்ணம் தடுப்பு நடவடிக்கை, எச்சரிக்கை.
5. காய்கறித் தோட்டம் அமைத்து அவற்றை எப்படிப் பாதுகாப்பது என்பதில் தெளிவு.

இப்படிப் பல்வேறு குணாதிசயங்களையுடையவராக இருக்க வேண்டும். மனம் போனபடி தனக்குத் தோன்றியதையெல்லாம் செய்துவிட்டு காய்கறித் தோட்டத்தைப் போட்டேன், கனத்த நஷ்டத்தை அடைந்தேன் என்று பின்னர் வருந்திப் புலம்பி எவ்விதப் பயனுமில்லை.

***வெற்றி நம் கையில்,***

நாவுக்குச் சுவை, பை நிறைந்த பொருளுமாக ஒரே கல்லில் இரண்டு என்ற ரீதியில் தங்கள் என்ன ஓட்டத்தை ஓட்ட விரும்புபவர்கள் மட்டுமே வெற்றிகரமான காய்கறித்தோட்டம் போடுபவராக இருக்க முடியும்.

எனவே, காய்கறித் தோட்டம் போடுவதற்கு முன்னர் திட்டமிடுங்கள்.

***பாத்திகளைப் பாதுகாப்பீராக!***

பாத்திகளைப் பிடித்து விதைகளை விதைக்கும்போது நாம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது அவசியமாகும்.

பாத்திகளைப் பிடித்து விதைகளை விதைத்து பின்னர் விதைக்கப்பட்ட அவ்விதைகள் சிதறிப் போகாதவண்ணமாக மிக்க கவனத்துடன் தண்ணீர் தெளித்து அதனைப் பாதுகாக்க வேண்டும். அத்துடன் நில்லாமல் பாத்திகளின் மேலே முள் கொத்துக்களையும் போட்டு மூடி வைத்துப் பாதுகாப்பதும் அவசியமாகும்.

***நாற்று நடுங்கள்***

இந்த விதைகள் நல்ல முறையில் முளைத்து நாற்றுக்கள் விட்டபின்னர் அவற்றைச் சுமார் நான்கு அங்குளம் வளர விடவும்.

நான்கு அங்குளம் வரை வளர்ந்தவுடன் அவற்றில் மிகவும் செழிப்பாக வளர்ந்திருக்கக்கூடியவற்றினைப் பிடுங்கி எடுத்து இரண்டு அடித்தூரம் இடைவெளிகள் விட்டு நடவேண்டும்.

***பராமரிக்கும் முறை***


நாற்றுக்களை நட்டு முடிந்தவுடன் அந்தச் செடிகளின் தன்மைகளுக்கு ஏற்றாற்போல நிலத்தினைக் காயவிட்டிட வேண்டும். பின்னர் தண்ணீரை உரிய காலத்தில் பாய்ச்சிட வேண்டும். இதற்கிடையே களைகள் தோன்றும் போதெல்லாம் களைகளையும் எடுக்கவும். அவசியம் நேரிடும் சமயங்களில் அவற்றைக் கொத்திவிட வேண்டும். பயிராக்கப்பட்ட - வற்றிலிருந்து உரிய பலனை அடையும்வரை ஓய்ந்திருக்கலாகாது.

அவ்வப்போது பயிருக்குத் தேவையான உரங்களையும் இட்டுப் பராமரித்தல் அவசியமானதொன்றாகும்.

## மரங்கள்



மரங்கள் - மழையின் ஆதாரம்
மரங்கள் - ஏழைகளின் வீடுகள்
மரங்கள் - பறவைகளின் கூடுகள்
மரங்கள் - மனிதனுக்கு உணவைத் தருகின்றன
மரங்கள் - மனிதனுக்கு சுவாசக் காற்றைத் தருகின்றன
மரங்கள் - வேலைவாய்ப்பைக் கொடுக்கின்றன
மரங்கள் - தொழில் வளத்தைப் பெருக்குகின்றன
மரங்கள் - மருந்தைத் தந்து காப்பாற்றுகின்றன
மரங்கள் - கால்நடைகளுக்குத் தீவனம் தருகின்றன
மரங்கள் - மண்ணுக்கு எருவாக உயிரளிக்கின்றன
மரங்கள் - பணத்தை வளர்த்து மக்களை உயர்த்துகின்றன
மரங்கள் - இறைவன் தந்த வரங்கள்



*நவீன வேளாண்மை - 1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தூளில் இருந்து எண்ணெய் தயாரித்தல்

## கப்பலோட்ட உதவும் மர எண்ணெய்

நமது மகாபாரதக் கதைகளில்தான் பனைமரத்தைப் பிடுங்கி பீமன் பல் துலக்கியதாய் பாட்டி சொல்லக் கேட்டிருக்கின்றோம். மற்றப்படி முழு மரத்தையும் அப்படியே உபயோகப்படுத்துவோர் யாரையும் நாம் பார்த்ததில்லை. மரம் எரிபொருளாகப் பயன்படும் பொழுது முழுக்க எரிந்து சாம்பலாக்கப்படுகிறது. மரத்தை கட்டடங்களில் நிலை, கதவு, ஜன்னல் என்று பயன்படுத்துகிறோம். பிறகு நாற்காலி, மேஜை என்று தினசரி பயன்படுத்தும் பொருளாக உருவாக்கியும் பயன்படுத்துகிறோம். இப்படித் தேவைக்கேற்ப மரத்தைக் குறிப்பிட்ட வடிவத்திற்கு மாற்றுகிறோம். இவ்வாறு மாற்றப்படும்பொழுது தேவையில்லாத பகுதிகள் அறுத்தோ, செதுக்கியோ, இழைத்தோ தீர்க்கப்படுகின்றன. இவை மரச் சிராய்கள் வடிவில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மரத்தூளை மட்டும் சாணத்துடன் கலந்து எரிபொருளாக்குவதும் உண்டு. இவை நெல் உமியுடன் கலந்து மூக்குக்கடலை, பட்டாணி, வேர்க்கடலை முதலியவற்றை வறுக்கவும். அரிசியிலிருந்து அவல், பொரி ஆகியவற்றைத் தயாரிக்க எரிபொருளாவதும் உண்டு.

மரத்தூளுடன் இரசாயனப் பசளைகளைக் கலந்து மரப்பலகைகள் போன்ற வுட்போர்ட்டுகள் செய்வதும் உண்டு.

இந்த முறைகளில் மரத்தூளைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் பயன் மற்றும் லாபம் குறைவானதே. எரிபொருளாகப் பயன்படும்பொழுது வெப்பத்தை மட்டும் பெறுகிறோம். ஆனால் விலை மதிப்புமிக்க வேறுபல இரசாயனப் பொருட்களை இழந்து விடுகிறோம்.

மரத்தூளை வுட்போர்டாக மாற்றுவதன் மூலம் கிடைக்கும் லாபத்தைவிடக் கூடுதலான லாபத்தை நாம் அடைய வழிமுறைகள் உள்ளன. அவை என்ன?

இயல்பாகவே எல்லாவகை மரங்களின் தூள்களிலும் எண்ணெய் உண்டு. மரத்தைச் சிராய்களாக வெட்டி எரிக்கும்பொழுது அவற்றிலுள்ள எண்ணெயும் எரிந்துவிடுகிறது. அதேசமயத்தில் மரத்தை விறகுக்கட்டைகளாகப் பிளந்து எரிக்கும்பொழுது மரக் கட்டைகளின் எரியாத முனையில் ஒருவிதமான எண்ணெய் தேன் நிறத்தில் குமிழ்களாக உருவாவதைப் பார்க்கலாம்.

மரத்தில் மறைந்திருக்கும் இத்தகைய எண்ணெய்யை எரி எண்ணெய்யாகப் பயன்படுத்தலாம். இந்த எண்ணெய் கப்பல்களைச் செலுத்துவதற்கும் மின்சார உற்பத்தி நிலையங்களில் எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

மேலும் மரத்தூளிலிருந்து எரிவாயுவையும் பெற முடியும். சவுக்குமரத்தூளின் எண்ணெய் கிருமி நாசினியாகவும், சரும நோய்க்கான மருந்துகளைத் தயாரிக்கவும் பயன்படுகிறது.

மரமறுக்கும் பெரிய ஆலைகள், ரயில் பெட்டித் தொழிற்சாலை, லாரி கட்டும் நிறுவனங்கள், பொம்மைகள், சிற்பங்கள் செய்யும் கூடங்களில் ஒரே நாளில் டன் கணக்கில் மரத்தூளைப் பெறலாம். இத்தகைய இடங்களை வாடிக்கையாக்கிக் கொண்டால் தொடர்ந்து மரத்தூள் கிடைக்கும்.

குறிப்பிட்ட ஒருவகை மரத்தின் எண்ணெய்யைப்போன்று மற்றொருவகை மரத்தின் எண்ணெய் இராது. ஒன்றுக்கொன்று வித்தியாசமானதாக இருக்கும்.

சவுக்கு, பூவரிசு, வேம்பு போன்ற மரங்களிலிருந்து எண்ணெய் கிடைக்கும். ஒவ்வொரு மரத்திலிருந்தும் கிடைக்கும் எண்ணெய்யும் அதன் இரசாயனப் பொருட்களைப் பொருத்தமட்டில் வித்தியாசமானதாக இருக்கும்.

மரத்தூளிலிருந்து எண்ணெய்யைப் பிரித்தெடுக்கும்முறை எளிமையாது. இதற்குத் தேவையான கருவிகளைச் சுலபமாகச் சேகரிக்கலாம்.

இரும்பிலான கொள்கலன் ஒன்று தேவை. பிறகு, 370 சென்டிகிரேட் வரை சூடாக்குவதற்கு உரிய அடுப்பு கொள்கலத்தினுள் 200 கி.கிராம் காற்றமுத்தத்தை உருவாக்க உதவும் உபகரணம் முதலியவைதான் முக்கியமானவை.

நாம் தேர்ந்தெடுத்த இரும்புக் கொள்கலன் வலுவான மூடியுடன் கூடியதாக இருக்க வேண்டும். மூடி 200 கி.கிறாம் அழுத்தத்தை தாங்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

மரத்தூளில் உள்ள எண்ணெய், கரையும் பொருட்களுடன் இணைந்த நிலையில் இருக்கும். எனவே அதனைப் பிரித்தெடுப்பதற்கு உதவியாக கரைப்பான்கள் தேவை. இந்தக் கரைப்பான்களும் எளிதாகக் கிடைக்கக்கூடியவைதான். சோடியம் கார்பநேட், கார்பன் மொனோக்ஸைட்டு போன்ற கரைப்பான்களே போதுமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் கொள்கலத்தினுள் கரைப்பானைப் போட வேண்டும். அதன் பிறகு கலத்தினுள் மரத்தூளைக் கொட்ட வேண்டும். மூன்றாவதாக நீர் கலந்த கந்தக அமிலத்தை ஊற்றிக் கலக்க வேண்டும். இப்பொழுது அனைத்தும் கலந்து கூழாகி விடும். இந்த நிலையில் கொள்கலத்தை மூடி அடுப்பில் வைக்க வேண்டும். 370 டிக்கிரி வரை கொள்கலத்தை சூடேற்ற வேண்டும். வெப்பநிலை உயரும் பொழுது கொள்கலத்தினுள் அழுத்தமும் 200 கி.கிறாம் அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும்.

370 டிக்கிரி சென்றிகிரேட் வெப்பநிலையை எட்டிய பிறகு கொள்கலத்தினுள் அழுத்தம் 200 கி.கிறாம் ஆக இருக்கும் பொழுது நாம் அடுப்பை அனைத்து விடலாம். அரை மணி நேரம் கொள்கலத்தை ஆறவிட வேண்டும். அதன் பிறகு கொள்கலத்தைத் திறக்கலாம்.

கொள்கலத்தைத் திறந்து பார்க்கும் பொழுது உள்ளே மரத்தூள் கசடு, தண்ணீர் மேலே மெல்லிய படலம் போல மரத்தூள் எண்ணெய் முதலியன மிதக்கும்.

*தகுந்த முறையில் இவற்றை பிரிப்பதுதான் அடுத்த நிலை.*

இந்த எண்ணெய் சிறந்த எரிபொருளாகும். இதனைக் கப்பல்களைச் செலுத்துவதற்கும் அனல் மின்சார நிலையங்களில் தண்ணீரை ஆவியாக்குவதற்கும் பயன்படுத்துகிறார்கள். இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்படாத குரூட் ஒய்லின் விலையை விடக் குறைந்த செலவில் இதனைத் தயாரிக்கலாம்.

இந்த எண்ணெய்யை உயர் வெப்பநிலையில் பகுப்பாய்வு செய்தால் என்னென்ன பொருட்கள் கிடைக்கும் என்பது தெரியவில்லை. அத்தகைய ஆராய்ச்சிகள் மரத்தூள் எண்ணெயிலிருந்து பிரமிக்கத்தக்க வகையில் இலாபந்தரும் பொருட்களைத் தரக்கூடும். ஆர்வமும், ஆய்வுக்கூட வசதியும் உள்ளவர்கள் இந்தப்பணியில் இறங்கலாம். அரசு ஆய்வுக்கூடங்கள், உயர் தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் இதில் கவனம் செலுத்தாதது ஏன் என்று தெரியவில்லை.

மரத்தூளிலிருந்து எரிவாயுவைப் பிரித்தெடுக்கலாம். அதற்குச் சற்று வித்தியாசமான உற்பத்தி முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

உயரமான கொள்கலங்களில் மரத்தூள்களை கச்சாக் கரியுடன் கலந்து கொட்ட வேண்டும். இக்கலவையைப் பின்னர் தீப்பற்ற வைக்க வேண்டும். குறைந்த அளவு காற்றில் மரத்தூள் எரியும்பொழுது அதிலிருந்து எரிவாயுவும் எண்ணெய்யும் வெளியாகும். எரிவாயுவைப் போக்கும் குழாய்கள் வழியாகக் குளிரவைக்கும் கண்டென்சர்களைச் செலுத்த வேண்டும். கண்டென்சர்களில் கொள்கலனிலிருந்து வெளியேறிய வாயு குளிரும் பொழுது எரிவாயுவாகவும் மரத்துள் எண்ணெய்யாகவும் பிரியும். மரத்தூள் வாயுவைத் தனிக் குழாய்கள் மூலம் பெரும் கலங்களில் சேமிக்கலாம்.

கொள்கலத்தில் மரத்தூள் கரிவடிவில் மிதந்திருக்கும். இந்தக் கரி எரியும் பொழுது புகையை வெளியிடுவதில்லை. இந்தச் சன்னரகக் கரியை கொண்டு கரிக்கட்டிகளைத் தயாரிக்கலாம். இந்தக் கரிக்கட்டிகளை அடுப்பிலும் பாயலர்களிலும் எரிபொருளாகப் பயன்படுத்தலாம். இது புகையாது. கண் எரிச்சல் தராது. இத்தகைய கரிக்கட்டிகள் கூடுதலான வெப்பத்தைத் தரும். அதனால் பொது மக்கள் விரும்பி வாங்குவார்கள் கொள்கலத்தில் மிச்சமாக இருக்கும் சக்கை கரியையே எரிபொருளாக மரத்தூளுடன் கலந்து எரிவாயுவும் மரத்தூள் எண்ணெய்யும் தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

மரத்தூளிலிருந்து பிரித்தெடுக்கும் வாயு சிறந்த எரிபொருளாகும். மரத்தூளிலிருந்து எரிவாயுவைப் பிரித்தெடுக்கும் முறை பைரோலிஸஸ் முறை எனப்படும். இந்த முறையில் தேங்காய் நார்கழிவு, செல்லுலோஸ்கழிவு, நெல்உமி, வைக்கோல் வகைகள் பல்வேறு வகையான கொட்டைகளின் ஓடுகள், மக்காச் சோலக்கழிவு போன்ற பொருள்களைப் பயன்படுத்தி எண்ணெய், எரிவாயு, கரி ஆகிய மூன்று வகையான பொருள்களையும் தயாரிக்க முடியும்.

இந்தோனேசியாவில் சானத்தை உருண்டைகளாக்கி அவற்றை கரியுடன் கலந்து வெப்பப்படுத்தி சான எரிவாயுவை தயாரிக்கின்றனர்.

மரத்தூளிலிருந்து கிடைக்கும் கரி, எரிவாயு, எண்ணெய் ஆகிய மூன்றும் தொழில் துறை தேவைகளுக்கும் வீட்டுத் தேவைகளுக்கும் பெரிதும் பயன்படும்.

**எச்சரிக்கை! எச்சரிக்கை!**

போட்டிகள் நிறைந்துள்ள இக்காலத்தில் வெறும் விளம்பரத்தால் மட்டும் விற்பனை செய்ய முடியாது. "தரம்" என்பதை எப்போதும் மனதிற் கொள்ள வேண்டும். ஒரு பொருளுக்குத் தொடர்ந்து விளம்பரம் செய்தாலும் தரம் இல்லையேல் விற்பனையாகாது. ஒரு வாடிக்கையாளரை இரண்டு முறை ஏமாற்ற முடியாது என்பதன் பொருளை வியாபாரத்தில் ஈடுபடுவோர் கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா

# U.S.A.

கொஞ்சம் இண்டர்நெட்டுடன் விளையாடியபோது கிடைத்த முகவரிகள், இங்கு சுடச்சுட தரப்படுகின்றன. திறமையான அமெரிக்க வியாபாரிகளின் முகவரிகள்.

தேவை : புகைப்படச் சட்டம், கனமான கம்பளிச் சட்டை, குடைகள், துணி வகைகள்.

நிறுவனம்: **George B. Quincey**
OS International
401 E, 34TH, STE N17K
New York,
NY 10016 - 4980 U.S.A.
T.P. : 212-481-7077
Fax : 212-481-3867

◆

தேவை : தேக்கு மரம், மரம் அறுக்கப்பட்ட மரத்துண்டுகள், தக்கை மரங்கள்.

நிறுவனம் : **President: Robert D. Keiver**
Keiver - Villard Lumber Cord
11-13 Graf Rd, Newburyport,
MA 01950-4014, U.S.A.
T.P : 508-462-7193
Fax : 508-465-6631

◆

தேவை : மூலிகைகள், தேயிலை, நறுமணப்பொருட்கள், அரிசி, கைவினைப் பொருட்கள்.

நிறுவனம் : **Preseident G.S. Khanna**
Bazar of India
Imports, Inc.
1810 University Ave,
Barkeley, CA 94703-1516
U.S.A.
T.P. : 510-548-4110
Fax : 510-548-1115

◆

தேவை : மாங்காய், கொய்யா, பப்பாளி, எலுமிச்சைச் சாறு, வாழைப்பழச் சாறு, புளி.

நிறுவனம் : **Mr. Hector E. Viale,**
Prima Foods International, Inc.
1838 Pattersan Ave, Bidg, P-1,
Deland, FL 32724-1923 U.S.A.
T.P. : 904-736-9138
Fax : 904-738-2748

◆

தேவை : பனை எண்ணெய்

நிறுவனம் : **Mr. Frank West**
M & W Distributuion Services
1775, West Gate PKWY
Atlanta, GA 30336-2847 U.S.A.
T.P. : 404-344-8902

◆

தேவை : பப்பாளிப் பழம்

நிறுவனம் : **Mr. L. William Mcnutt, Jr,**
Collinn Street Bakery,
P.O. Box : 79,
Corsicana, Tx 75151-0079
U.S.A.
T.P. : 903-872-8111

◆

தேவை : இறால், நண்டின்வால்.

நிறுவனம் : **Mr. Roy Zaloom**
Zaloom Brothers Co. of New Jersey, Inc.
505 Jefferson Ave,
P.O.Box : 2397 Secaucus,
NJ 07094 - 2012 - U.S.A.
T.P. : 201-863-7400
Fax : 201-863-8036

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Mission Leader
**Colin Lane**
**Managing Director**
**Hobson & Sons (London) Ltd.**
Kenneth Road,
Thundersley, Essex, SS7 3AF
Tel: (+44) 1268 793097
Fax: (+44) 1268 566024



Andy White
**Export Sales Co-odinator**
**BDH Laboratory Supplies,**
Merck House,
Poole,
Dorset, BH15 1TD
Tel: (+44) 1202660444
Fax: (+44) 1202 66856



Peter Harpur
**Principal**
**Bedfordshire**
Investigation Bureau,
24 Langford Road, Henlow,
Bedfordshire, SG16 6AF.
Tel: (+44) 1462 851673
Fax: (+44) 1462 851675



Jonathan Halliday
**Sales & Marketing Manager**
**Cutom Quest Ltd.,**
Parbrook,
Billinghurst, West Sussex.
Tel: (+44) 1403 783040
Fax: (+44) 1403 783977



Jaffer Manek
**Director**
**Euro Asia Pacific**
Professionals Group Ltd.,
18 Greenway, Totteridge,
Londen N20 8ED.
Tel: (+44) 181 4452223
Fax: (+44) 181 4452393



Simon Croskell
**Export Divisional Manager**
**Ajax Machine Tool Company Ltd.,**
Stockport Road East,
Bredbury, Stockport,
Cheshire SK6 2AT
Tel: (+44) 161 430 5231
Fax: (+44) 161 494 2812

# BRITISH TRADE MISSION

## ஜூன் 15 முதல் 19 வரை ஸ்ரீலங்கா வந்த பிரிட்டிஷ் வர்த்தக தூதுக்குழு



Ian Kirby
**Director**
**Global Locking Systems Ltd.,**
69 Morgan Close,
Ashmore Lake, Willenhall,
West Midlands WV12 4LH
Tel: (+44) 1902 607080
Fax: (+44) 1902 606969



Paul Natolie
**Export Manager**
**Key Industrial Equipment Ltd.,**
Blackmoor Road,
Ebblake Industrial Estate,
Berwood, Dorset BH31 6AT
Tel: (+44) 1202 822214
Fax: (+44) 1202 813627

நாம் இங்கு ஒரு டெலிபோன்கோள் எடுக்க ஒரு தபால் நிலையத்தையோ கொமியுனிகேசனையோ தேடிக்கொண்டிருக்க அங்கே பிரிட்டிஷில் ஒரு ஆறு வயது குழந்தை எங்கே ஒரு கோடியில் இருக்கும் தனது தோழியுடன் குசினிக்குள் இருந்து டெலிபோனில் உரையாடிக்கொண்டிருக்கிறது.

உருளைக் கிழங்கையோ கரட் பீட்ருட்டையோ பயிரிட போதிய நிலம் இருந்தும் எவ்வாறு பயிரிடுவது என நாம் மண்டையை பிய்த்துக் கொண்டிருக்க அங்கே ஜப்பானில் கடலுக்கு மேல் மண்மேடை அமைத்து விளைச்சளை பன்மடங்கு பெருக்கி we are the number one in the world (நாம் தான் இந்த உலகத்திலேயே முதன்மையானவர்கள்) என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.



Paul Curtis
**Export Sales Engineer**
**Ampy Automation Digilog Ltd.**
Frognall, Deeping St. James,
Peterborough PE6 8SE
Tel: (+44) 1778 343560
Fax: (+44) 1778 344807



Mission Secretary
**David Lakins**
**Technical Support Adviser**
**Business Link Dorset Ltd.,**
4 New Fields,
Stensford Road, Nuffield,
Poole, Dorset BH17 0BL.
Tel: (+44) 1202 448838
Fax: (+44) 1202 448838

நல்ல கோப்பிக்கொட்டை விளையும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. ஆனால் பிரேசில்தான் உலகின் கோப்பி விலையை தீர்மானிப்பதில் கிங். ஆம் தனிக்காட்டு ராஜா, ஸ்ரீ லங்காவில் எப்போதுமே கோப்பி விலை 32/= முதல் 40/= ரூபா போகும். ஒருநாள் கனடாவில் இருந்து ஒரு நபர் வந்து இலங்கையில் உள்ள சகல கோப்பிகளையும் வாரிக்கொண்டு சென்றார். கோப்பிக்கு ஏனிந்த திடீர் மவுசு என நம்மவன் சிந்திக்கவே இல்லை விற்று தீர்ந்து ஒரு மாதத்தின் பின்தான் தனக்கு உபயோகிப்பதற்குக்கூட கோப்பி இல்லையே என தலையிடித்துக் கொண்டான். இனி இந்தியாவை தொடர்பு கொண்டான். அங்கு கோப்பி விலை 160/= என்றனர். பின் பிரேசிலை தொடர்பு கொண்டனர். இங்கு கடந்த மாதம் வீசிய புயல் மழையினால் கோப்பி மரங்கள் எல்லாம் வீழ்ந்து அழிந்துவிட்டன. "இனி 3 வருடத்திற்கு கோப்பியை பற்றியே விசாரிக்க வேண்டாம் please" என செய்தி வந்தது. அதன்பின் தான் நம்மவன் முழங்காலுக்கும் மொட்டை தலைக்கும் முடிச்சுப்போட்டான்.



Hamish Perera
**Director**
**Jubliee Power Plant,**
45 Fairfield Road,
West Drayton,
Middlesex UB7 8EY.
Tel: (+44) 1895 449971
Fax: (+44) 1895 441975



Brian Speight
**Director**
**Europa Management,**
60 Seafield Road, Bournemouth,
Dorset BH6 3JF
Tel: (+44) 1202 425749
Fax: (+44) 1202 423018

பிரேசிலில் பேய்மழை ஆரம்பித்து கோப்பி மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்ட செய்தி உலகம் முழுவதும் உள்ள பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வர நமது பத்திரிகைகளில் 2 c.m. செய்தியாக வந்தது. விடயத்தை புரிந்து கொண்ட கனடா வியாபாரி காரியத்தை கச்சிதமாகப் பயன்படுத்த அடுத்த வருடம் அவரது கோப்பி 720/= விலை போனது. ஒரு மாதம் இலாபம் கொள்ளையடித்ததால்கூட இவ்வாறு பயன் அடைய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S. Mahen
**Managing Director**
**Mac - Alliance & Co. Ltd.,**
No 33 Arundel Drive,
Woodford Green,
Essex IG8 9BZ
Tel: (+44) 181 4917559
Fax: (+44) 181 5592230

## சற்று சிந்தியுங்கள்

- ☑ நம்மிடம் பணம் இருக்கின்றது.
- ☑ நல்ல மூளை இருக்கின்றது.
- ☑ தரமான மண்வளம் இருக்கின்றது.

நீங்கள் 40% முதலிட்டால் நாங்கள் 60% கடன் தருகின்றோம். போ்வழி என வரிந்து கட்டிக்கொண்டு நல்ல வா்த்தக வங்கிகள் இருக்கின்றன. இவையனைத்தும் இருந்தும் நாம் ஏன் இன்னும் 1948 இலேயே இருக்கின்றோம். காரணம் பயம்,

முன்னேறும் துடிப்பு மிகமிகக் குறைவு.

ஜப்பானையும், அமெரிக்காவையும், கனடாவையும், பிரிட்டனையும், இந்தியாவையும், பாகிஸ்தானையும் பார்த்து கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஏன் கொட்டாவி விடுகின்றீர்கள்? நீங்களும் முன்னேறுங்களேன் எனக் கூறிக்கொண்டு உங்களுக்கு தோள் கொடுக்க வருவதுதான் **TRADE MISSION** கள்.

ஒவ்வொரு நாடும் மாதாமாதம் அல்லது குறிப்பிட்ட சில காலத்துக்கு ஒரு முறை தங்கள் நாட்டிலிருந்து தலைசிறந்த வா்த்தகா்களைத் தெரிவு செய்து எமது நாட்டுக்கு அனுப்பி வைக்கின்றன. அவா்கள் 30, 40 போ்களடங்கிய குழுக்களாக ஸ்ரீ லங்கா வந்து பிரபல்யமான ஹோட்டல்களில் தங்கி இருந்து கொண்டு தங்களைச் சந்திக்கவரும் வியாபார நோக்குமுள்ளவா்களை சந்தித்து, மணிக்கணக்கில் உரையாடி ஏற்றுமதி, இறக்குமதி, உற்பத்தி, கூட்டு முயற்சி என வியாபாரங்களை தொடங்குகின்றனா்.

அவ்வாறு கடந்த ஜூன் 15 முதல் 19 வரை கொழும்பு வந்து "லங்கா ஒபரோய்" Lanka Oberoi ஹோட்டலில் தங்கிய 24 பேரடங்கிய பிரிடிஷ் வா்த்தக தூதுக்குழுவை இங்கு காண்கின்றீா்கள்.

இவா்களிடம் உற்பத்தி இயந்திரங்கள், தொழில்நுட்ப அறிவு, நவீன தொடா்பாடல் சாதனங்கள், ஆலோசனைக்குழுக்கள், வியாபாரம் செய்யத் தேவையான முதலீடு, பணம் நமது மண்ணில் எதைப் புதைத்தால் கூடிய விரைவில் நிறையப் பணத்தைத் தரும் பொருள் விளையும் என்பதைக் கண்டு பிடிக்கக் கூடிய விஞ்ஞானிகள் குழு என்பன இருக்கின்றன.

**அடுத்த இதழில் இவா்களில் யாரைத் தொடா்பு கொண்டு என்ன தொழிலைச் செய்யலாம் என்ற விபரங்களைத் தருவோம்.**



Mr. Nizar
**A-Z Consultancy,**
64 Leyton Road,
Wimbledon,
London SW19 1DL
Tel: (+44) 181 540 4322
Fax: (+44) 181 241 4629



Michael Gorbey
Marconsult-Marcon Optics,
31A St. Helens Road,
Swansea,
SA1 4AP.
Tel: (+44) 1792 561234
Fax: (+44) 1792 561016



Terry Merston
**Training Director**
**Training Security Investigation Ltd.,**
Ridgemond Park Business Centre,
Telford Avenue, Stevenage,
Hertfordshire
Tel: (+44) 1438 743998
Fax: (+44) 1438 740213



Geoffrey Frost
**Mono Equipment Ltd.,**
Queensway,
Swansea West Industrial Park,
Swansea SA5 4EB
Tel: (+44) 1792 561234
Fax: (+44) 1792 561016



Michael Ramsey
**Managing Director**
**Scotland Electronics (Int) Ltd.,**
West Road,
Greshop Industrial Estate,
Forres, Moray IV36 DGW
Tel: (+44) 1309 678900
Fax: (+44) 1309 678909



Diane Middleton
**Company Secretary**
**Pama (JVC) Ltd.,**
Shangri-Lar House,
Milton Brodie,
Alves, Moray IV36 QUA
Tel: (+44) 1309 678900
Fax: (+44) 1309 678909



Ashley Beaton
**Export Sales Development Manager**
**Premier Industrial (UK) Ltd.,**
36-48 Queen Street,
Horsham, West Sussex RN13 5AD
Tel: (+44) 1403 213317
Fax: (+44) 1403 213331



Dr. Paul McIlroy
**Join Managing Director**
**Project Marketing**
International Ltd.,
67-69 Whitfield Street,
London W1P 5RL
Tel: (+44) 171 436 5128
Fax: (+44) 171 468 3553



Dean Ossman
**Quo Systems Ltd.,**
4th Floor, Jessica House,
Red Lion Square,
191 Wandsworth High Street,
London SW18 4LS
Tel: (+44) 181 877 7408
Fax: (+44) 181 877 7409

No photo available

Shan Ruban
**Quo Systems Ltd.,**
4th Floor, Jessica House,
Red Lion Square,
191 Wandsworth High Street,
London SW18 4LS
Tel: (+44) 181 877 7408
Fax: (+44) 181 877 7409



Michael Moore
**Director**
**Salmi (UK) Ltd.,**
Atlantic Business Centre,
Atlantic Street,
Altrincham, Cheshire WA14 5NQ
Tel: (+44) 161 929 5380
Fax: (+44) 161 929 5379



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீ வளர்த்தல்

தேனீ வளர்த்தல் இலகுவானதும் இலாபகரமானதுமான ஒரு தொழிலாகும். இதனைப் பொழுதுபோக்காகவும் செய்யலாம். எமக்குத் தேவையான சுத்தமான தேனை நாமே தேடிக்கொள்ளலாம். பொதுவாகத் தேனீ கொட்டும் இயல்புடையது எனக்கருதி பலர் இத்தொழிலில் ஈடுபடுவதில்லை. ஆனால் தேனீயை எமது நண்பனாக்குவதன் மூலம் நல்ல பயன்களைப் பெறலாம் என்பதைப் பலரும் உணர்ந்து கொள்வதில்லை. தேனீ வளர்ப்பதன் மூலம் தேன் மெழுகு, தேனீ விஷம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

மனிதத் தேவைக்கு வேண்டிய தேனில் ஒரு சிறு பகுதி மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றது. தேன் உணவுத்தேவைக்கு மட்டுமன்றி மருந்தாகவும் பயன்படுவதனால் எப்போதுமே நல்ல சந்தை வாய்ப்புண்டு.

தொழில்நுட்பம் இலகுவானது. பயிற்சியும் அனுபவமும் அவசியம். தேனீக்களில் இராணித்தேனீ, ஆண்தேனீ, வேலையாட்தேனீ என மூன்று வகையுண்டு. இராணித்தேனீயும் வேலையாட் தேனீயும் எப்போதும் ஒரு குடியில் காணப்படும். ஆண்தேனீக்கள் விஷேட சந்தர்ப்பங்களில் மட்டும் காணப்படும். ஒரு குடியின் தலைவியாக இராணித்தேனீ தொழிற்படும். இதன் தொழில் முட்டையிடுவது மட்டுமே. நாளொன்றுக்கு 500–1200 முட்டைகளை இது இடும். வேலையாட் தேனீக்களே பூக்களிலிருந்து தேனை எடுத்துவரல், சேமித்தல் போன்ற சகல வேலைகளையும் செய்யும். ஒரு குடியில் 25,000–100,000 வரையிலான தேனீக்கள் காணப்படும்.

தேன் குடி ஒன்றைப் பிடித்து தேனீப் பெட்டி ஒன்றில் நிலைப்படுத்துவதற்கு அனுபவம், பயிற்சி பெற்ற ஒருவரின் உதவி அவசியமாகும். பூக்கள் அதிகளவில் மலர்ந்து மகரந்தமும் தேனும் அதிகளவில் சேமிக்கப்படும் காலம் தேனீ விருத்தியடையும் காலமாகும். இக்காலத்திலே ஒரு குடியிலிருந்து பல தேனீக்குடிக்கள் உருவாகின்றன. இச்சந்தர்பத்திலேயே தேனீக்குடி ஒன்றைப் பிரித்தெடுத்து தேனீப்பெட்டியில் நிலைப்படுத்தி வைத்தல் வேண்டும்.

வசந்தகாலத்தில் தேனீக்கள் தேன் சேகரிப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபடும். தேன் வதைகளில் தேன் சேகரிக்கப்படும். வதையில் தேன் நிறைந்த பின்னர், புகையூட்டி, தேன் பிரித்தெடுக்கும் கருவி ஆகியவற்றின் உதவியுடன் தேனைப் பிரித்தெடுக்கலாம். தொழில்நுட்பம் பற்றிய விபரங்கள், பயிற்சி ஆகியவற்றிற்கு விவசாயத்திணைக்கள விவசாயப் போதனாசிரியர்கள், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்கள அலுவலர்களை நாடவும்.

தேனீப்பெட்டி, புகையூட்டி, தேனீக்களைக் கொண்டு செல்லும் பெட்டி, தேன் பிரித்தெடுக்கும் கருவி, முகமூடிவலை என்பன உபகரணங்களாகத் தேவைப்படும்.

இதற்கான முதலீடு 2500/= (ஐந்து குடிகளுக்கானது) அளவில் தேவைப்படலாம். இதனால் கிடைக்கப்பெறும் மாதாந்த வருமானம் சுமார் ரூபா 1000/= அளவில் இருக்கும்.


**ரேடிமேட் ஆடைகள் இவர்களுக்குத் தேவை**

**Nijmat Al Bureimyu**
Trading Est.
P.O.Box : 25593
Riyadh - 11476
Saudi Arabia

**Fadi Company**
185, Al Qeish Street,
Cairo, Egypt.


**Al - Esayi Al - Hoaibi Co.**
P.O. Box : 436, Jeddah - 21411
Saudi Arabia.

**Kuwait Aghadir Trading Est.**
P.O. Box : 33538,
Rawda,
73456 - Kuwait.
Kuwait.

தேவை: **கோழி இறைச்சி**
**DEBSH Co.**
International Trade Business
P.O.Box : 1587 - 5948
Tehran
Iran
T.P. : 021-851119
Fax : 021-846010




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெண்கட்டி தயாரித்தல்

எழுதுவதற்குப் பயன்படும் வெண்கட்டிகளை வீடுகளிலும், சிறு தொழிற் கூடங்களிலும் தயாரிக்கலாம். இப்பொருளுக்கான கேள்வி எந்நாளும் குறைவடைவதில்லை. எமது நாட்டிற்குத் தேவைப்படும் தொகையில் சிறு அளவு மட்டுமே இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே, ஆர்வத்துடன் உழைப்போர் வெண்கட்டி தயாரித்தல் மூலம் பெரும் முன்னேற்றத்தை அடையலாம்.

நாட்டிலுள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தனியார் கல்வி நிலையங்கள், அரச திணைக்களங்கள் வெண்கட்டிகளை நாளாந்தம் பயன்படுத்துகின்றன. எனவே, நிலையானதும், சீரானதுமான சந்தைவாய்ப்பு உண்டு. சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப வெண்கட்டிக்கான கிராக்கியும் அதிகரிக்கும்.

தொழில்நுட்பத் தேர்ச்சிக்கேற்பப் பொருளின் தரம் வேறுபடும். தரமான பொருட்களுக்கே நல்ல வரவேற்புக் கிடைக்கிறது. எனவே, வெண்டிகட்டி தயாரிப்பதற்கு ஓரளவு பயிற்சியும், தொழில்நுட்பத் தேர்ச்சியும் அவசியமாகின்றது. தொழில்நுட்பப் பயிற்சியினை இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் கொழும்பு, பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபை மாவட்ட சிறு கைத்தொழில் திணைக்கள அலுவலகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தேவையான மூலப்பொருட்கள் பிலாஸ்டர் ஓப் பரிஸ் (கழிவு செய்யப்பட்ட மோல்) மட்பாண்டக் கூட்டுத்தாபனம் பெருமளவு மோல் (ஜிப்சம்)களை கழிவு செய்கின்றது. இதனைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தேவையான உபகரணங்கள் : மோட்டார் (கிரனைட்) சம்மட்டி, வடிதட்டு, தராசு, அடுப்பு, அளக்கும் சிலிண்டர், வாளி, (10 லீட்டர் கொள்ளளவு) இறப்பர் அச்சுக்கள், மேசை, மெஷ் (வயர்) அண்ணலவான முதலீடாக ரூபா 25,000/= தேவைப்படும். இதனால், பெறக்கூடிய மாதாந்த வருமானம் அண்ணலவாக 3,500/= இருக்கும். எனினும் உற்பத்தியாளரின் தேர்ச்சி, திறமை, உற்பத்தி அதிகரிப்பு ஆகியவற்றைப் பொறுத்து மாத வருமானத்தை அதிகரிக்கலாம்.

காணி, கட்டடம் ஆகியவற்றுக்கான பெறுமதியோ வாடகையோ முதலீட்டுத் தொகையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஜிப்சம் என்னும் கனிப்பொருள் 120°-130° சென்றிகிறேட் வெப்பமூட்டப்படும்போது பிளாஸ்டர் ஓப் பரிஸாக மாற்றமுறுகின்றது. இது உள்ளூரில் பரிசுச் சாந்து அல்லது ஈரமற்ற சீமெந்து எனப்படுகின்றது.

## வெண்கட்டி செய்முறை

கழிவு செய்யப்பட்ட பிளாஸ்டர் ஓப் பரிஸ் மோல்ட்களை வெயிலில் உளர வைத்து இடித்து மாவாக்க வேண்டும். பின் அதனை 60 மெஸ் அரிதட்டில் அரித்தெடுக்க வேண்டும். பெறப்பட்ட மாவை பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி 180° சென்றிகிறேட் வெப்பமேற்ற வேண்டும். பின் அடுப்பிலிருந்து இதனை இறக்கி ஆறவைத்து 60 மெஸ் அரிதட்டினால் அரித்தெடுக்க வேண்டும்.

அரித்தெடுக்கப்பட்ட மாவுடன் உள்ளூர் பிளாஸ்டர் ஓப் பரிஸ் 20% அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பி.ஓ. பரிஸ் 5% சேர்க்கப்பட வேண்டும். இவற்றுடன் கயோலின் (சீனக்களி) 4 : 1 என்ற விகிதத்தில் கலக்கப்பட வேண்டும். இச்சேர்வையை பாத்திரம் ஒன்றினுள் இட்டு சிறிது சிறிதாகத் தண்ணீர் விட்டுக் கலக்க வேண்டும். (2½ கிலோ கிறாம் மாவுக்கு 3 பைந் தண்ணீர் போதுமானது) இவ்வாறு கலக்கும்போது மூலப்பொருட்களிலிருந்து வாயு குமிழிகளாக வெளியேறும். இக்குமிழிகள் நன்கு வெளியேறும்வரை கலக்கப்பட்டு மீட்டர் என்னும் கருவி மூலம் கலவை நன்கு பிசையப்படுதல் வேண்டும்.

இவ்வாறு செய்கையில் கலவை நன்கு பதப்படும். அப்போது மண்ணெண்ணையினால் சுத்தப்படுத்தப்பட்ட வெண்கட்டி அச்சுக்களில் கலவையை வார்த்தல் வேண்டும். அச்சில் கலவை இறுகிவரும்போது வெப்பநிலை அதிகரிக்கும். இந்நிலையில் அச்சுக்களைக் கழற்றி வெண்கட்டிகளை வெளியே எடுத்து கம்பி வலைகளில் அல்லது மரத்தட்டுகளில் இரண்டு நாட்களுக்கு உலரவிடுதல் வேண்டும்.

உலரவைக்கப்பட்ட வெண்கட்டிகள், 100 வெணகட்டிகளுக்கு ஒன்றாக பெட்டிகளில் அடுக்கப்படுதல் வேண்டும். இவை பெட்டிகளில் செங்குத்தாக அடுக்கப்படுதல் வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் Jaffna

05.04.1998 இல் யாழ் சென் ஜேம்ஸ் கல்லூரியில் நடந்த கைப்பணிக் கண்காட்சியில் நாம் கண்டது.


இவர்களுக்கு கைகொடுக்க வேண்டியவர்கள் கைகொடுத்தால் ஸ்ரீ லங்காவையும் வல்லரசாக மாற்றலாம்.



பனம் பாணியிலிருந்து சீனி உற்பத்தியாகிறது



குறைந்த விலையில் தயாரான கூரை ஓடு



பொம்மைகள், பூ வாஸ்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோல் பொருட்கள்



சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து நாங்களே உற்பத்தி செய்கின்றோம்



தனது வீட்டுத் தோட்டத்தில் விளைந்த புளி வாழையுடன்





மலச்சிக்கல், அஜீரணம், சகல வாய்வுகள், வாதங்களள், பசியின்மை, வயிற்றுக் கடுப்பு, வயிற்று வலி, நெஞ்சு வலி, திரேக சொறிச்சல், சூதக வாய்வு, நெஞ்சடைப்பு

வாருங்கள் எம்மிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளான் செய்கை



இன்றைய உலகில் மனித உணவுக்கான தேவைகள் பெருகிவிட்ட நிலையில் புதிய புதிய உணவு அறிமுகங்களும், உற்பத்தி முறைகளும் அறிமுகமாகிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், பல நூறு வருடங்களுக்கு முன்னிருந்தே மனித உணவுக்காக பெரிதும் விரும்பிப் பயன்படுத்தப்பட்டுவரும் அதிக சத்துக்களைத் தன்னகம் கொண்டுள்ளதும் பல்வேறு நோய்களுக்கு நிவாரணியாகவும் ஏன்...! குறித்த சில நோய்கள் வராமல் தடுக்கும் வல்லமையும் கொண்ட காளான் எனப்படும் தாவரப்பூஞ்சணம் அண்மைக் காலங்களில் எல்லோராலும் அறியப்பட்டு பெரிதும் பிரசித்திபெற்று உலகெங்கிலும் பலதரப்பட்டவர்களினாலும் விரும்பி உண்ணப்படுவதும், இதன் தேவைகள் (நுகர்வு) அதிகரித்து விட்டதுமான நிலையில் இக்காளான் பற்றியும் அதன் இலகு பயிர்செய்கை பற்றியும் நாம் அறிந்து கொள்வதினால் இதன் அருமையும் தேவையின் முக்கியத்துவமும் கண்டு நீங்களும் இவ் இலகு செய்கையில் ஈடுபட்டு பெருலாபம் என்பதும் வெளிநாடுகளில் பெரும் கிராக்கியைக் கொண்டிருப்பதினால் ஏற்றுமதியில் ஈடுபட்டு குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சியும் அடையலாம்.

### காளானில் அடங்கியுள்ள போசணை சத்துக்களும் அதன் அண்ணளவான அளவீடுகளும்

100 கிராம் அறுவடை செய்யப்பட்ட புதிய காளானில் அடங்கியுள்ள போசணைப் பொருட்கள்

| | | |
|---|---|---|
| நீர் | 91.00 | கிராம் |
| சக்தி | 12.00 | கிலோ கலோரி |
| புரதம் | 2.500 | கிராம் |
| கொழுப்பு | 0.300 | கிராம் |
| கல்சியம் | 20.00 | மில்லி கிராம் |
| இரும்பு | 1.000 | மில்லி கிராம் |
| தயமின் | 120.0 | மைக்ரோ கிராம் |
| ரைபோபிளேஸின் | 500.0 | மைக்ரோ கிராம் |
| நயாசின் | 5.800 | மில்லி கிராம் |
| விற்றமின் சி | 3.000 | மில்லி கிராம் |

காளானில் சிறிதளவு புரதம், பல்வேறு விட்டமின்கள், கனியுப்புக்கள் என்பனவும் அடங்கியுள்ளன. நாளாந்தம் எமக்குத் தேவைப்படும் புரதத்தைக் காளான் மாத்திரம் பூர்த்தி செய்யாது. ஆனாலும் இறைச்சி, மீன், பால், பட்டர் போன்ற பல்வேறு விலங்குணவுகளில் காணப்படும் புரதத்தைப் போன்றே காளான் புரதமும், தரத்தில் சிறந்ததாகவும் விளங்குகின்றது. எனவே, முக்கியமாக தானியப்பொருட்களை உண்ணும்போது காளானையும் சேர்த்துக் கொள்வதின் மூலம் உடலுக்குத் தேவையான தரமான புரத அளவை எளிதாக அதிகரித்துக் கொள்ளலாம்.

இவ்வகையாக சத்துக்களையும் தனித்தன்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இக்காளான் பற்றியும், அதன் வகைகள், இலகு செய்கைகள் பற்றியும் நாம் கவனிப்போம்.

### காளான் பயிர்ச்செய்கையிலுள்ள நன்மைகள்

காளான் செய்கைக்கு சிறிதளவு இடம் போதுமானதாகும். இதனால் காணி வசதிகள் இல்லாதவர்கள் தொடக்கம் நகர்ப்புற குறுங்காணிச் சொந்தக்காரர்கள் வரையில் தன்னம்பிக்கையுடன் இதில் ஈடுபட முடியும். எந்த ஒரு முயற்சிக்கும் முதலீடு அவசியம். முதலீடு பெரிதானதாகவன்றி மிகச் சிறிய அளவில் முதலிட்டு செய்கை பன்னக்கூடியதனால் அதிக வசதியில்லாதவர்களும்கூட இதில் ஆர்வத்துடன் ஈடுபடலாம்.

இச்செய்கைக்கு மிக இலகுவாகக் கிடைக்கும் வைக்கோள், மரத்தூள் போன்றவற்றைப் பயன்படுத்த முடியும் என்பதுடன், தேவையான வேறு உபகரணங்களையும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளவும் முடியும். இதே



போலவே இதிலிருந்து குறைந்த காலத்தில் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

## காளான் இனங்கள்

1. வைக்கோள்க் காளான்
2. சிப்பிக் காளான்
3. மொட்டுக் காளான்
4. சிடாகோ காளான்
5. அபலோன் காளான்

உணவுக்குப் பயன்படுத்தப்படும் காளானில் மேற்குறித்தவைகள் பரந்த அளவில் செய்கை பண்ணப்படுகின்றன. ஆயினும், எமது நாட்டில் இரு காளான் வகைகளே பிரதானமாக செய்கை பண்ணப்படுகின்றன. அவையாவன: முறையே சிப்பிக்காளான், வைக்கோள்க் காளான் எனலாம். இவற்றுள்ளும் சிப்பிக் காளானே அதிகம் பிரசித்தி பெற்றது. இதிலும் மூன்று வர்க்கங்கள் உள்ளன. அவையாவன முறையே: கோல்டன் வர்க்கம், அமெரிக்க வர்க்கம், பூட்டான் வர்க்கம் என்பனவாகும்.

## சிப்பிக்காளான் செய்கை பண்ணும் முறை

வருமானம் பெறும் நோக்குடன் சிப்பிக்காளான் செய்கையை மேற்கொள்வதாயின் பின்வரும் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

a ஈரப்பதன் குறைந்த வெப்பநிலை என்பவற்றை தொடர்ச்சியாக பாதுகாக்க தக்கனவாக அமைக்கப்பட்ட கொட்டில்.

b ஆரோக்கியமான, நல்லினமான காளான் வித்துக்கள்.

c மரத்தூள் அடைக்கப்பட்ட பைகளை நீராவியால் அவிப்பதற்கு தேவையான பீப்பாய் ஆகியவை.

கொட்டில்கள் மேல் குறிப்பிட்டது போல் ஈரப்பதனும் குறைந்த வெப்பம் நிலவக்கூடியதும் நல்ல காற்றோட்டமானதும் சுத்தமானதும் அண்டிய பகுதிகளில் நீர் தேங்கி நிற்காத இடமாகவும் கூடிய வரையில் ஓரளவு மர நிழல் உள்ள பகுதியிலும் அமைந்திருத்தல் வேண்டும். கொட்டிலில் சிறிய அறையொன்றை அமைத்துக்கொள்ளல் வேண்டும். இவ் அறை தொட்டிலில் ஏனைய பரப்பை விட இருட்டானதாக இருத்தல் அவசியமாகும். காளான் வளர்ச்சியடைவதற்காக மரத்தூள் கொண்ட பொலிபுரோபிலின் பைகளை சேமித்து வைக்க இவ்வறை உதவும். இது அடைகாக்கும் அரை எனப்படும். கொட்டிலின் மற்றைய பகுதியின் ஓரளவு வெளிச்சமும் நல்ல காற்றோட்டமும் இருக்க வேண்டும். அறுவடைக்கு தயாரான காளான் பைகள் இந்த இடத்தில் வைக்கப்படும். இது அறுவடை அறை எனப்படும். கொட்டிலின் கூரை தென்னை ஓலைகளின் கிடுகுகளினால் அமைக்கப்படுவதனால் நல்ல குளிர்மையையும் குறைந்த செலவையும் கொண்டிருக்கும். நிலத்திலிருந்து 3 – 4 அடி உயரம் வரை செங்கற்களாலோ மண்ணினாலோ சுவர் அமைத்து இதிலிந்து கூரை வரையான பகுதியை திறந்து மூடத்தக்கவாறு சாக்கு அல்லது கம்பி வலைகளினால் அமைத்துக்கொள்வதனால் கொட்டிலினுள் காற்றின் ஈரப்பதன் வெளிச்சம் என்பவற்றை தேவைக்கேற்றவாறு சரி செய்து கொள்ளலாம். கொட்டிலின் நிலப்பகுதி இரண்டு அங்குலத்திற்கு சுத்தமான மணலைக் கொண்டிருத்தல் வேண்டும். இருட்டறைகொட்டிலின் மற்றைய பகுதி என்பவற்றில் பைகளை அடுக்கக்கூடியதாக இறாக்கைகள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

காளான் செய்கையின் வெற்றி பிரதானமாக தரமான, நல்ல வித்துக்களை பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. நல்ல வித்துக்களைப் பயன்படுத்த எப்போதும் நம்பிக்கையான விதை உற்பத்தியாளர்களிடமிருந்து வித்துக்களைக் கொள்வனவு செய்ய வேண்டும். இப்படிப் பெறப்பட்ட வித்துக்களைப் பாவிக்கும் வரை இருளான, குளிரான இடத்தில் சேமித்து வைக்க வேண்டும்.

மரத்தூள் காளான் செய்கை பண்ணும்போது மரத்தூள் அடைக்கப்பட்ட பைகளை நீராவியில் நன்கு அவிக்க வேண்டும். இதற்கு வசிதியாக பெரிய பீப்பாய் ஒன்றை பாவிக்கும் வசதியுடையதாக தெரிவு செய்து மூடியின் மத்தியில் சிறிய துளையிட்டு பீப்பாயின் அடியில் ஆறு அங்குள உயரத்தில் மேடை அமைத்து அதில் பைகளை அடுக்கி நீருக்கு வெப்பமேற்றி ஆவியில் பைகளை நன்கு தொற்றுநீக்க வேண்டும்.

சிப்பிக்காளானை பலமுறைகளில் செய்கை பண்ணக்கூடியதாக இருந்தாலும், மிக எளிதாகவும் அதிக செலவின்றிக் கிடைக்கக்கூடியதும் உயர் பலாபலனை தரக்கூடியதுமான மரத்தூளை ஊடகமாகத் தெரிவு செய்து செய்கை பண்ணுவது மிக நன்று.

## மரத்தூளை ஊடகமாகக் கொண்ட செய்கை

முதலில் மரத்தூள் கொண்ட பைகளை ஆயத்தம் செய்யவும், மரத்தூள் இறப்பர், மா, ஆல்பீசியா போன்ற பாரமற்ற வர்க்கங்களின் மரத்தூளைப் பெற்றுக் கொள்வது மிக முக்கியமானது. பைகளை தெரிவு செய்யும் போது எக்காரணத்தை முன்னிட்டும் பொலிதீன் பைகளைத் தெரிவு செய்யக்கூடாது. காளான் வளர்ப்பின் ஊடகமான மரத்தூளை பைகளில் நிரப்பி தொற்று நீக்க நீராவியில் அவிக்க வேண்டியதினால் இத்தேவைகளுக்கு பொலிதீன் பொருத்தமானதன்று. எப்பொழுதும் 7 அங்குள அகலமும் 20 கேஜ் தடிப்பமும் உடைய பொலிபுரோபின் பைகளையே தெரிவு செய்ய வேண்டும். மேலும், பஞ்சு அல்லது வெட்டுத்துண்டுகள், 1 அங்குள விட்டமும் 1/2 அங்குள உயரமும் கொண்ட பீ.வி.சி. பைபுகள், இறப்பர் பட்டிகள், 4x4 அங்குள கடதாசித் துண்டுகள் என்பவற்றையும் ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ப்பு ஊடகத்தைத் தயாரித்தல்

மரத்துள் 100 கிலோ
சிவப்பு அல்லது வெள்ளை அரிசி தவிடு 10 கிலோ
கல்சியம் காபனேற்று அல்லது டொலமைற் அல்லது நீர் சுண்ணாம்பு 2 கிலோ
சோயா மா அல்லது பாசிப்பயறு மா 01 கிலோ
மகனீசியம் சல்பேற்று 200 கிராம்

## செய்முறை


சுத்தமான சீமெந்துத் தரையில் அல்லது பொலித்தீன் விரிப்பின் மீது மரத்தூளை இட்டு அதனுடன் அரிசித்தவிடு, கல்சியம் காபனேற், சோயா மா அல்லது பாசிப்பயறு மா ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்கவும். மகனீசியம் சல்பைற்றை நீரில் கரைத்து கலவையுடன் நன்றாகக் கலக்கவும். கலக்கப்பட்ட கலவையை உருண்டையாக பிடித்து கையினால் நசிக்கும்போது விரல்களுக்கிடையே நீர் வழியாத அளவில் இக்கலவையில் நீர் சேர்க்கப்பட வேண்டும். 13 அங்குள நீளம் இருக்கத்தக்கவாறு ஆயத்தம் செய்யப்பட்ட பொலிபுரோபிலின் பைகளில்



முக்கால் பங்கு உயரம் வரை இக்கலவையை நன்றாக இறுக அமர்த்தி நிரப்புதல் வேண்டும். இதன் பின் பைகளில் வாய்ப் பகுதியை பீ.வி.சி. குழாயினுள் புகுத்தி அதனைப் பஞ்சினால் அடைத்துவிடவும். பின் பஞ்சைக் கடதாசித் துண்டினால் மூட இறப்பர் பட்டியால் இறுக்கவும். இவ்வாறு ஆயத்தம் செய்யப்பட்ட பைகளை பீப்பாயினுள் வைத்து நீராவியால் 2 மணி நேரத்துக்குக் குறையாது அவிக்கவும். பீப்பாயின் அடுக்கி பைகள் வைக்கப்பட்டிருக்கும் மட்டத்திற்கும் கீழ் நீர் இருக்கத்தக்கவாறு பீப்பாயில் நீர் விட வேண்டும்.

சுத்தமான மேசையொன்றின் மேல் மதுசார விளக்கொன்றை அல்லது சில மெழுகுவர்த்திகளை ஏற்றிவைத்து, நீராவியால் அவித்து ஒருநாள் வைத்திருந்து குளிர்வடைந்த பைகளை ஏற்றிவைத்த விளக்கின் முன்னால் வைத்து அவற்றின் பஞ்சு அடைப்பை நீக்கி ஒவ்வொரு பையினுள்ளேயும் ஒரு தேக்கரண்டி காளான் வித்துக்களை இட்டு விரைவாக பஞ்சினால் மீண்டும் இறுக மூடிவிடவும். வித்துக்கள் இடப்பட்ட பைகளை காளான் வளர்வதற்கான கொட்டிலின் இருளான அறையில் இராக்கைகளில் அடுக்கி விடவும்.

25-30 நாட்களில் பொண்ணிறமான பூஞ்சன இழைகள் வளர்ப்பு ஊடகத்தில் வளர்ச்சியடைந்திரப்பதை அவதானிக்க முடியும். மரத்தூள் வளர்ப்பு ஊடகத்தில் நன்றாக வளர்ச்சியடைந்த வெண்ணிறமான பூஞ்சன இடைகள் காணப்படும். இன்நிலையில் பைகளை இருள் அறையில் இருந்து வெளியே எடுத்து இப்பைகளில் வளர்ப்பு ஊடகங்களுக்கு மேலாக உள்ள பொலிபுரோபிலீனை லெட்டாக அகற்றவும். இதன் பின் அறுவடை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட கொட்டிலின் பகுதியிலுள்ள இராக்கைகளில் அவற்றை கிடையாக அடுக்கி வைக்கவும் இப்படியாக அறுவடை செய்யக்கூடிய நிலையில் உள்ள பைகள் இருக்கும் பகுதியில் காற்றோட்டம், ஈரப்பதன் என்பவற்றை சரியான அளவில் பராமரிக்க வேண்டும். இதற்கு கொட்டிலின் நிலத்தில் பரவப்பட்டுள்ள மனலை ஈரமாக்குதல், சாக்குகளை ஈரமாக்குதல், என்பவற்றுடன் பைகளுக்குக காலையும் மாலையும் தெளிகருவி ஒன்றினால் நீரை விசுறுதல் போன்றவற்றால் பராமரிக்கலாம்.



## அறுவடை செய்தல்

அறுவடை செய்யும் இடத்தில் கொண்டு வரப்பட்ட பைகளில் 7-10 நாட்கள் இடைவெளியில் 8-10 தடவைகள் வரை அறுவடை செய்ய முடியும். அறுவடை செய்யும் போது காளான் மொட்டுக்களுடன் அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்த பின் வளர்ப்பூடகத்தின் மேற்பரப்பை கூரிய கத்தி ஒன்றால் சுரண்டிவிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீடைகளைக் கட்டுப்படுத்தல்

எம் நாட்டில் செய்கைபன்னும் காளானில் குறிப்பிடத்தக்க சேதத்தை சிற்றுண்ணிகளும் பூச்சிகளும் ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. காளானை பாதிக்கும் பீடைகள் பல வகைகள் பிரிவுகள் இருக்கின்ற போதிலும் யாவற்றையும் கட்டுப்படுத்த சிறந்த வழியாக ஆரம்பம் முதலே சுத்தமாகவும் அவதானமாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் குறிக்கப்பட்ட பைகளில் பூச்சி தாக்கம் ஏற்படுமிடத்து உடனடியாக அப்பைகளை வேறு இடத்துக்கு மாற்றி பூச்சிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதினால் நோய் மற்றையவற்றுக்கு பரவுவதையும் தாக்குதலுக்குள்ளாவதையும் தவிர்க்கலாம். பூச்சித்தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் அடங்காதவிடத்து உடனடியாக குறித்த பைகளை அழித்து விடுதல் நன்று.



பீடை தாக்கத்தினை கட்டுப்படுத்த பலவகையான கிருமிநாசினிகள் உள்ள போதிலும் இயற்கை முறையில் கட்டுப்படுத்தவும் பூச்சித்தாக்கம் ஏற்படாது காக்கவும் மிகச் சாதாரணமாக எல்லா இடங்களிலும் பெறக்கூடிய நாயுண்ணித்தாவர இலைகள் அவற்றிலிருந்து கிடைக்கும் சாறு போன்றவற்றால் கட்டுப்படுத்த முடியும். இல்லையேல் கடையில் விற்பனை செய்யப்படும் போமலீன் எனும் இரசாயனத்தை 1 : 1 என்ற வீதத்தில் நீருடன் கலந்து இதன்பின் அறையை ஒரு நாள் முழுவதும் மூடி வைக்கவும். இதனால் அறையிலுள்ள காற்றில் போமலின் கலப்பதால் அறையில் காணப்படுமம் பூச்சிகள் இறக்கும்.

## காளானை நீண்ட காலம் சேமித்து வைத்திருத்தல்

அறுவடை செய்யப்பட்ட காளானை குளிரான இடத்தில் 10– 12 மணித்தியாலங்கள் வரை சிறந்த நிலைமையில் சேமிக்க முடியும். பொலிதீன் பைகளில் அடைத்து குளிர்சாதனப்பெட்டிகளில் 2 – 3 நாட்கள் வரை வைத்திருக்க முடியும்.

4 – 6 வாரங்கள் வரை காளானை சேமித்து வைக்க வேண்டுமாயின் முதலில் கொதிநீரில் 3 நிமிடங்கள் வரை அமிழ்த்தவும். இதன் பின் பொலிதீன் பைகளில் அடைத்து குளிர்சாதனப்பெட்டியில் சேமிக்கவும்.

6 மாத காலம் வரையில் சேமிக்க வேண்டுமாயின் காளானை சிறு துண்டுகளாக வெட்டி அவற்றை 3 நிமிடங்கள் வரையில் நீராவியில் அவித்து சூரிய ஒளியில் நன்றாக உலர்த்தவும்.

## காளான் வித்துக்களை நீண்ட காலம் சேமித்து வைத்திருத்தல்.

காளான் வித்துக்கள் கொண்ட பைகளை 2 நாட்களுக்கு ஒரு தடவை கைகளால் கசக்கி விட வேண்டும். வெளிச்சமில்லாத குளிரான இடத்தில் இப்பைகளை சேமித்து வைத்திருக்க முடியும். 3 – 5 சென்றிகிறேட் வெப்ப நிலையில் குளிர்சாதனப்பெட்டியில் சேமித்து வைத்திருக்க முடியும்.

## செய்வதைத் திருந்தச் செய்

ஆசிரியருக்கு,

தங்களது லங்கா டுடே முதல் இதழ் கண்டேன். நிறைய விபரங்களை அறிந்தேன், கற்றேன். முழுக்க முழுக்க ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடும் என் குடும்ப அங்கத்தவர்களை பொறுத்தவரையில் இது எமக்கு ஒரு வரப்பிரசாதமே.


பின் அட்டை விளம்பரத்தில் "கையில் நெய்யை வைத்துக்கொண்டு வெண்ணெய்க்கு அலையாதீர்கள்" என மகா பெரிய பிழை விட்டீர்களே! அது *கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையாதீர்கள்* என வரவேண்டும்.

திருமதி ஷீலா,
49, எக்மோர் பிரதான வீதி,
எக்மோர், சென்னை, 600 008

*தவறுக்கு வருந்துகிறோம்.*
*உங்கள் ஆர்வத்துக்கு நன்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடு வளர்ப்பு

டாக்டர் ந. அருள்நேசன்-அரச கால்நடை வைத்தியர்.

## 1. அறிமுகம்

ஆடு "ஏழைகளின் பசு" என அழைக்கப்படுகின்றது. சிறிய தொகையாகவோ அல்லது பெருந்தொகையாகவோ ஆடுகளை வளர்த்து பெரும் நன்மை அடையாலாம். இலங்கையில் தற்போது மொத்தமாக 532,000 ஆடுகள் உள்ளதென கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 52% ஆன ஆடுகள் உலர்வலயத்திலேயே காணப்படுகின்றன. (அனுராதபுரம், யாழ்பாணம், புத்தளம்.)

ஆடு வளர்ப்பின் நோக்கங்களாக பின்வருவன கருதப்படுகின்றன.

1. பால்
2. இறைச்சி
3. பசளை (சிறுநீர், ஆட்டுப் பிழுக்கை)
4. தோல்

ஆட்டுப்பாலில் புரதம் அதிகமானதாகவும் கொழுப்பு குறைவானதாகவும் காணப்படுவதால் ஆட்டுப்பால் நோயாளர்களுக்கு மிகச் சிறந்ததொன்றாகும்


## 2. ஆட்டின் வகைகள்

பாலுக்காக வளர்க்கப்படுபவை - சணன் ~~(india)~~

இறைச்சிக்காக மட்டும் வளர்க்கப்படுபவை - கொட்டுக்கச்சி, ஜேர்மன் போயர் ~~(புத்தளம்)~~


பாலுக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுபவை - ஜமுனாபாரி

### சணன்



இவ்வாடு பாலுக்காக வளர்க்கப்படுகின்றது. சணன் ஆட்டிலிருந்து ஒரு நாளைக்கு 1-2 லீட்டர் வரையிலான பால் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாடு இரு வருடத்தில் மூன்று குட்டிகள் ஈனும் சணன் ஆடுகள் மற்றைய ஆடுகளுடன் ஒப்பிடும் போது குட்டையானதாக சிறியதாக காணப்படும்.

### ஜமுனாபாரி



இவ்வாடு பாலுக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றது. இறைச்சிக்காக வளர்க்கப்படும் போது ஒருவருடத்துக்குள் அண்ணளவாக 30kg நிறையை குட்டிகள் அடையும். இவ்வாடு உயரமானதாக உருவத்தில் பெரியதாக காணப்படும்.

### ஜேர்மன் போயர்

இவ்வாடு ஜேர்மனி நாட்டிலிருந்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாடு இறைச்சிக்காக மட்டுமே வளர்க்கப்படுகின்றது. இதன் குட்டிகள் வருடத்தில் 35-40 kg வரையிலான நிறையை அடையும்.

## 3. ஆடு வளர்ப்பு முறைகள்

1. திறந்தவெளி வளர்ப்பு முறைகள்
2. உள்ளக வளர்ப்பு

### திறந்தவெளி வளர்ப்பு


இவ்வளர்ப்பு முறையில் ஆடுகள் திறந்தவெளியில் வளர்க்கப்படுகின்றன. இவ்வளர்ப்பு முறை போதிய பாதுகாப்பு அற்ற முறையாக இருப்பதுடன் நோய் தொற்றல் அதிகமானதாகவும் காணப்படும். ஆட்டினால் கழிக்கப்படும் சிறுநீர், ஆட்டுப்பிழுக்கை போன்றவற்றை பசளைக்காக சேகரிப்பதும் கஷ்டமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உள்ளக வளர்ப்பு

இவ்வளர்ப்பு முறையில் கொட்டில் அமைக்கப்பட்டு அதில் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. கொட்டில் கால் நிலத்தில் இருந்து உயரமானதாக காணப்படும். அடித்தளம் சிறு பலகைகள் கொண்டு சிறு இடைவெளிகள்



விடப்பட்டுக் காணப்படும். இதனால் சிறுநீர், ஆடுப்பிழுக்கை என்பன அடித்தளத்தளத்தில் தேங்கி நிற்காது. நிலத்தில் விழுந்து விடும். இம்முறையில் வளர்க்கப்படும் ஆடுகளில் நோய்த்தொல் மிகவும் குறைவாகக் காணப்படும். அத்துடன் ஒவ்வொரு ஆட்டையும் தனித்தனியாக அவதானித்து மிகச் சிறப்பாக பராமரிக்கக்கூடியதாக இருக்கும். இவ்வளர்ப்பு முறையில் பிற எதிரிகளிடமிருந்தும் காலநிலைத் தாக்கங்களில் இருந்தும் ஆடுகளுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பு கிடைக்கிறது.

### 4 (i) பாலுக்காக வளர்க்கப்படும் ஆட்டுக்கான திட்டம்

| | |
|---|---|
| ஆட்டின் வகை | பாலுக்கான ஆடு |
| இனம் | சணன் அல்லது அதன் கலப்பு |
| ஆட்டின் எண்ணிக்கை | இரண்டு மறி ஆடுகள் ஒரு கிடாய் ஆடு |
| பால் அளவு (1.5 லீற்றர் நாள் x 2 ஆடு) | 3 லீற்றர் |
| ஒரு நாள் பால் விற்பனையின் வருமானம் | (3 லீற்றர் x 40/= ) 120/= |
| குட்டிகள் விற்பதனால் வருமானம் (2 குட்டிகள் / வருடம்) | 3000/= |

### 4 (ii) இறைச்சிக்காக வளர்க்கப்படும் ஆட்டிக்கான திட்டம்

| | |
|---|---|
| ஆட்டின் வகை | இறைச்சிக்கான ஆடு |
| இனம் | ஜமுனாபாரி |
| ஆட்டின் எண்ணிக்கை | இரண்டு மறி ஆடுகள் ஒரு கிடாய் ஆடு |
| ஒரு வருடத்தில் ஒரு குட்டியின் நிறை 35kg | |
| ஒரு வருடத்தில் குட்டிகள் இறைச்சிக்காக விற்பதன் மூலம் வருமானம் (2 குட்டிகள் /வருடம்) | 3000/= x2 = 6000/= |

## 5. இலங்கையில் ஆடு வளர்ப்பு முன்னேற்றம் அடையாததற்கான காரணங்கள்

1. ஆடு வளர்ப்பு சம்பந்தமாக அரசிடம் நீண்ட காலநோக்கிலான கொள்கைகள் திட்டங்கள் இல்லாமை.
2. நல்ல தரமான இனப் பெருக்கத்திற்கான ஆடுகள் இல்லாமை.
3. ஆடு வளர்ப்பு தொடர்பான வெளிக்கள சேவைகள் குறைவாக உள்ளமை.
4. சிறந்த முறையில் ஆட்டுப்பால், ஆட்டு இறைச்சி சந்தை அமைப்பு முறைகள் இல்லாமை.
5. ஆட்டுப்பால் சம்பந்தமாக மக்களுக்கு போதிய அறிவின்மை.
6. ஆடு வளர்ப்பு தொடர்பாக பண்ணையாளர்களுக்கு போதிய அளவு சேவைகள், கடன் திட்டங்கள் இல்லாமை.
7. செயற்கை முறை சினைப்படுத்தல் வசதிகள் குறைவாகக் காணப்படல்.

## 6. ஆட்டு நோய்கள்

பின்வரும் நோய்கள் ஆடுகளில் பிரதானமாக காணப்படும் நோய்களாகும்.

குடற்புழுக்கள் (Intestinal Parasites)
ஆட்டு அம்மை (Goat Pox)
தொடுகை முறை பரவும் தோல் கொப்புளங்கள் (Contagious Pustular Dermatitis)
மடி அழற்சி (Mastitis)
குளம்பு நோய்கள் (Lamness)
பங்கசுத் தொற்றல் (Fungal Infection )
கோமாரி நோய் (Rinderpest)
ஏற்பு வலி (Tetanus)
நியூமோனியா (Pneumania)
வயிறு ஊதல் (Bloat)
கால் வாய் நோய் (Foot and Mouth)

மேற்படி நோய்கள் சம்பந்தமாக போதியளவு அறிவையும், சிகிச்சையையும் பெறுவதற்கு அவ்வப்பிரதேச அரச கால்நடை வைத்திய அலுவலகங்களை அணுகலாம்.


குறிப்பு

* *ஆடு சம்பந்தமான மேலும் விபரங்கள் அடுத்த இதழில் தரப்படும்.*
* *மிருகம், பறவை சம்மந்தமான சகல கேள்விகளுக்கும் அரச கால்நடை வைத்தியர் Dr. அருள்நேசன அவர்கள் பதில் தருவார்.*
* *ஆடு, மாடு, கோழி, பன்றி, வான்கோழி பாரிய அளவில் செய்ய விரும்புபவர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு ஆலோசகர்களை லங்கா டுடே பெற்றுத் தரும்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினையாக்கும்



சாப்பிடும் போது உணவுடன் தொட்டுக்கொள்ள அவசியப்பட்ட நிலையிலிருந்து பூரி சப்பாத்தி போன்ற உணவு வகைகளோடு பதார்தமாக சேர்த்துக்கொள்ளக் கூடிய வகையில் விதம் விதமாக பற்பல சுவையுடன் 18 வகையான ஊறுகாய்களை அறிமுகப்படுத்துகிறது மதுரை அரவிந்து ஃபுட் பிராடக்ட்ஸ் நிறுவனம். அதன் உறிமையாளர் திருமதி கஸ்தூரி அவர்களை சந்தித்தோம்.

முதன் முதலாக ஆறு வருடங்களுக்கு முன்பாக இந்த நிறுவனத்தைத் துவக்கினோம். முதலில் 50 பைசா விலையில் சிறு சிறு பக்கெட்டுகளில் மட்டுமே சந்தையிட்டோம். தனது ருசியினால் மதுரை மக்களின் மனதை கொள்ளைகொண்ட எம்முடைய தயாரிப்புக்கள் சிறுகச்சிறுக நிலையான இடத்தைப் பிடித்துக்கொண்டது. எந்த ஒரு தொழிலை செய்தாலும் ஏதோ கடமைக்குச் செய்யக்கூடாது. தெளிவோடும் தொலைநோக்குப் பார்வையோடும் தொழில் செய்ய வேண்டும். எனவே இந்தத் தொழிலை உறுதியாகவும் வித்தியாசமாகவும் செய்து ஊறுகாய் தொழில் குடிசைத் தொழில் என்ற நிலையிலிருந்து மாறி இதையும் ஒரு ஈடுபாட்டுடன் செய்தால் பெரிய அளவிலான தொழிலாக மாற்றலாம் என நம்பினேன். அதனால் ஏதோ ஒரு இரண்டு மூன்று வகைகளோடு நிறுத்திக் கொள்ளாமல் பற்பல விதங்களை அறிமுகப்படுத்தினேன். இன்று எம்முடைய தயாரிப்புக்கள் 18 வகைகள் இருக்கிறன. இன்னும் பலவகையான ஊறுகாய்களை சந்தையிட வேண்டுமென்பதுதான் எங்களுடைய எதிர்காலத்திட்டம். 100 கிராம் மற்றும் 300 கிராம் அளவில் கண்ணாடிப்பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய தயாரிப்பில் விஷேசமான அளவில் விற்பனையாகிக் கொண்டிருப்பது காளான் ஊறுகாய். இதில் நார்சத்து, புரோட்டீன் சத்துப் போன்றவையும் அடங்கியிருக்கின்றன. இதைச் சாப்பிடுவதால் சிறுநீரகக் கோளாறு, ஹார்ட்அட்டேக் போன்றவை குணமாகிறது. உணவோடு தொட்டுக் கொள்ள மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த ஊறுகாயை இந்த மாதிரி வித்தியாசமான கோணத்தில் தயாரித்து சத்தோடு மருத்துவ குணமும் ஒருங்கே பெற்றிருப்பதால் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இன்னொருவகை காய்கறி ஊறுகாய். அதாவது அனைத்துவிதமான இங்கிலிஷ் காய்கறிகள் மசாலாவோடு சேர்த்து தயார்செய்கிறோம். இதை ஊறுகாயாகவும் சப்பாத்தி பூரி போன்றவற்றுடன் பதார்த்தமாகவும் சேர்த்துக்கொள்ள முடியும். இந்த வகையும் மக்களிடம் பேராதரவு பெற்றுவிட்டது. இப்படி நாங்கள் ஆரம்பித்த ஊறுகாய்கள் மற்றவர்களின் தயாரிப்பு முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதால் அருகிலுள்ள ஊர்களிலிருந்தும் டீலர்சிப் கேட்டு நிறைய வியாபார விசாரணைகள் வந்து கொண்டேயிருந்தது. தற்பொழுது குமரி மாவட்டம், கோவில்பட்டி, அரும்புக்கோட்டை, இராமேஸ்வரம், பரமக்குடி, ராமநாதபுரம், பழனி, மதுரை, போன்ற இடங்களில் டீலர்சிப் தந்து டீலர் மூலமாக விற்பனை செய்து வருகிறோம். மேலும் தமிழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் தனித்தனியாக டீலர்சிப் கொடுக்க இருக்கிறோம். விரும்புகிறவர்கள் எங்களை நாடலாம். எமது டீலர்களுக்கு நாங்கள் விற்பனையில் உதவும் விதமாய் மார்க்கெட்டிங் பிரதிநிதிகளை அனுப்புகிறோம். அவர்களே ஒவ்வொரு கடைகளிலும் ஆர்டர் எடுத்து விற்பனை செய்து தருவார்கள். தமிழ்நாடு தவிர ஒரிஸ்ஸாவில் எங்கள் தயாரிப்பு அனுப்ப இருக்கிறோம். மற்றப்படி, சிங்கப்பூர், வலைகுடா நாடுகளிலிருந்தும் வியாபார விசாரணைகள் வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கும் "மாதிரி" (Sample) அனுப்பி வைத்திருக்கிறோம். எவ்வளவு ஆடர்கள் கிடைத்தாலும் தட்டுப்பாடின்றி சரக்கை அனுப்ப முடியும். காரணம்



மூலப்பொருட்கள் அனைத்துமே உள்ளூர்ச் சந்தையிலேயே கிடைக்கின்றன. நிறையப்பேர் எங்களிடம் வேலை செய்கிறார்கள். எனவே, சப்ளை செய்வதில் எவ்விதச் சிரமும் இருக்காது. எங்களுடைய தயாரிப்பு எவ்வளவு வேகமாக விற்பனையானாலும் தொடர்ந்து மக்களின் கவனத்தைப் பெற சுற்றியுள்ள எந்த இடங்களில் பொருட்காட்சி நடந்தாலும் நாங்கள் "ஸ்டால்" அமைத்து பங்கு கொள்கிறோம். இந்த ஊறுகாய் வகைகள் போக இட்லி பொடியையும் அறிமுகப்படுத்தி இருக்கிறோம். இன்னும் சில மாதங்களில் அனைத்துவிதமான மசாலாப் பொடிகளையும் அரவிந் ஃபுட் புரடக்ட்ஸ் நிறுவனம் தயாரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப்படுத்தப் போகிறது என்கிறார். தயாரிப்பு சம்பந்தமான பணிகளை திருமதி கஸ்தூரி அவர்கள் கவனித்துக் கொள்கிறார். மார்கடிங் துறையை அவரது கணவர் திரு பாஸ்கர் கவனித்துக் கொள்கிறார். திரு பாஸ்கரிடம் ஊறுகாய் தயாரிப்பின் எதிர்காலம் பற்றிக் கேட்டபோது, இது நல்ல எதிர்காலம் உள்ள தொழில். சுவையுடன் சுத்தமும் கவனிக்கத்தக்க விஷயம். நாங்கள் சுத்தத்திற்கு மிகவும் முக்கியத்துவம் தருகிறோம். எங்களுடைய மார்கடிங்முறை வலுவானது. அதாவது, சின்ன பெட்டிக்கடை முதல் ஸ்டார் ஹோட்டல்கள்வரை எமது தயாரிப்பு நீக்கமற நிறைந்திருக்கிறது. தேவையான அளவில் மார்கடிங் பிரதிநிதிகளை வைத்திருக்கிறோம். அவர்கள் சந்தையின் மனோநிலையை உண்ணிப்புடன் கவனித்து வருவதால் எதிர்காலத்திலும எமது தயாரிப்புகள் பிரபலமாய் தொடர்ந்து இருக்கும். அதற்கான அடிப்படையை (Network) திட்டமிட்டு செய்து வருகிறோம். எங்களிடம் டீலராக விரும்புகிறவர்கள் முற்பணம் தர வேண்டியதில்லை. ஆனால், உண்மையிலேயே தொழில் செய்ய வேண்டும். அந்தத் தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்ற ஆர்வமும் ஊக்கமும் உடையவராய் இருக்க வேண்டும். திறமையான நபரால்தான் தொடர்ந்து தொழிலை உறுதியாகச் செய்ய முடியும். டீலர்சிப் இல்லாத இடங்களுக்கு எங்களை அனுகலாம்.

கோயம்புத்தூரிலும் இப்பொழுது ஒரு கிளையை துவக்கியுள்ளோம். அந்த அலுவலகத்தை மையமாக வைத்து அந்தப் பகுதிகளில் விஷேச கவனம் செலுத்த இருக்கிறோம். இன்னும் குறுகிய நாட்களுக்குள் ஊறுகாய் என்றால் அது அரவிந் ஊறுகாய் தான் என்ற அளவில் அனைவராலும் அறியப்படத்தக்க வகையில் எங்கள் செயற்பாடுகள் அமையும். பெண்கள் இந்நாட்டின் கண்கள். பெண்ணாகப் பிறக்க மாதவம் செய்திட வேண்டும் என்று சிறப்பாக சொல்லப்பட்டாலும் எத்தனை பெண்கள் சாதிக்கிறார்கள் என்ற கேள்வியே மேலோங்கி நிற்கிறது. பெண்கள் நினைத்தால் அவர்களாலும் எவ்வளவோ சாதிக்க முடியும் என்பதற்கு என் மனைவியே உதாரணம் என்று மனம் திறந்து பாராட்டினார் தம்மிடம். பெண்கள் பல துறைகளில் தங்களை நிரூபித்துக் கொண்டிருக்கும் காலம் இது. இன்னும்பலர் வீட்டுப் பெண்மணிகளாகவே முடங்கிக் கிடக்காமல் வாய்ப்புள்ள துறையில் வெளியே வர வேண்டும். பெண் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த அரசும் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டுள்ள வேளையில் இதைப்போன்ற தொழில் துவங்க இலவச ஆலோசனைக்காக என்னை நாடலாம் என்கிறார் திருமதி கஸ்தூரி அவர்கள்.


வியாபார விசாரணைகளுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும் நாடவேண்டிய முகவரி:

*அரவிந் ஃபூட் புரடக்ட்ஸ்,*
*43, ஹார்வி நகர்,*
*இரண்டாவது தெரு, அரசரடி,*
*மதுரை - 625 016*
*தொ.பே.எண். (0452) 608682*

*பிரவீன் ஜோ*

*உயர் தொழில் இதழிலிருந்து திரு. கங்காதரன்*

*அடுத்த இதழில்...*



# நீங்களும் ஏற்றுமதியாளர் ஆகலாம்

- *ஏற்றுமதி ஒப்பந்தங்கள் செய்வது எப்படி*
- *ஏற்றுமதிக்கு உதவும் அரச அலுவலகங்கள்.*
- *ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் பெறுவது எப்படி*
- *நமது நாட்டில் இயற்கையாக கொட்டிக் கிடக்கும் வளங்களை எவ்வாறு ஏற்றுமதி செய்வது*
- *வெளிநாட்டு மார்கட் நிலவரங்களை அறிந்து கொள்வது எவ்வாறு?*
- *ஏற்றுமதியில் L/C, DP, DA, FOB, C&F, CIF என்பதன் விபரங்கள் என்ன?*
- *ஏற்றுமதிக்கு உதவுவதற்காக ஒவ்வொரு நாட்டிலும் இலங்கை அரசு நியமித்துள்ள எமது நாட்டு அலுவலகங்களின் விலாசங்கள்.*

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் உயர் அதிகாரிகள் விரிவாக அலசுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாருங்கள் தொழில் தொடங்குவோம்!

## சந்தை ஆய்வு

வெற்றிபெற்ற பல தொழிலதிபர்களை சந்தித்து உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன? என்று கேட்டால் வாடிக்கையாளர்களின் தேவையை அறிந்து அதற்கு ஏற்றாற்போல் செயற்படுகிறோம் அதுவே எங்கள் தொழிலின் வெற்றிக்கு அடிப்படை என்பதுதான் பதில்.

வாடிக்கையாளர்கள் மனநிலை, எதிர்பார்ப்பு, சந்தையிலுள்ள பொருட்கள், அங்குள்ள சேவைகள், சந்தையின் குணங்கள், போட்டியாளர்கள் நிலை, சந்தைப்படுத்தும் நுணுக்கங்கள் ஆகியவற்றை ஒவ்வொரு தொழில் முனைவோரும் முதலிலேயே தெளிவாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளவும், சந்தை பற்றிய அனைத்து விபரங்களை அறிந்து கொள்ளவும் மிகவும் உறுதுணையாய் இருப்பது மார்க்கெட் ரிசர்ச் (Market research) எனப்படும் சந்தை ஆய்வு ஆகும்.

சந்தை ஆய்வினை மேற்கொள்வது எப்படி? இது பெரிய ஆராய்ச்சி என்றும் ஆராய்சியாளர்களாலும் வல்லுநர்களாலும் மட்டுமே சந்தை ஆய்வு செய்ய இயலும் என்றும் சில இளம் முனைவோர்களும் கருதுகிறார்கள்.

இன்னும் சிலர் எந்த ஆய்வு செய்தாலும் எல்லாம் விதிப்படிதான் நடக்கும் என வீணான காரணத்தைப் பிடித்து திருப்தி பட்டுக் கொள்கிறார்கள்.

முதலில் எதற்காக சந்தை ஆய்வை மேற்கொள்ள வேண்டும்? அதனை எப்படி மேற்கொள்ள வேண்டும் என தீர்மானித்துக் கொள்வது நல்லது.

சந்தை ஆய்வின் நோக்கத்தையும் எப்படிப்பட்ட தகவல்கள் சேகரிக்க வேண்டும் என்பதையும் முடிவு செய்த பின்னர்தான் இந்தத் தகவல்கள் எங்கிருந்து கிடைக்கும் என்ற விபரத்தைச் சேகரிக்க முடியும். ஆகவே, சத்தை ஆய்வின் நோக்கத்தை முதலிலேயே முடிவு செய்து விடுவது நல்லது. இந்த நோக்கத்தை முடிவு செய்ய கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளித்தாலே போதும்.

1. சந்தையின் அளவு (Size of the Market) என்ன?
2. சந்தையில் உங்கள் பொருள் எந்த அளவுக்கு இடம் பிடிக்க வேண்டும் என எண்ணுகிறீர்கள்?
3. உங்கள் சந்தையின் வடிவம் (Market Structure) என்ன?
4. வாடிக்கையாளராகப்போகும் பொருள் வாங்குவோரின் வாங்கும் பழக்கம் எப்படி உள்ளது?
5. பொருளை வாங்குவோர் எதற்காக உங்கள் பொருளை வாங்குவார்கள்? பொருள் வாங்குவதன் உள்நோக்கம் என்ன?
6. உங்கள் நிறுவனத்தின் பலமாக எதனைக் கருதுகிறீர்கள்?
7. உங்கள் நிறுவனத்தின் பலவீனமாக எதனைக் கருதுகிறீர்கள்?
8. உங்கள் நிறுவனத்தின் வாய்ப்புகளாக எவற்றைக் கருதுகின்றீர்கள்?
9. உங்கள் நிறுவன வளர்ச்சிக்குத் தடையாக எவற்றைக் கருதுகிறீர்கள்?
10. உங்கள் நிறுவனத்தின் கடந்தகாலநிலை எப்படி உள்ளது? எதிர்காலநிலை எப்படி அமைய வேண்டும் என எண்ணுகிறீர்கள்?

இந்தப் பத்துக் கோள்விகளுக்கும் தெளிவான விடைகளைக் கண்டறிந்தால் உங்கள் சந்தை ஆய்வின் நோக்கத்தைத் தெளிவாகத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

சந்தை ஆய்வின் நோக்கத்தை தீர்மானித்த பின்னர்தான் எந்தவகையான தகவல்களைச் சேகரிக்க வேண்டும் என்றும், எவ்வளவு பணம் சந்தை ஆய்வு செய்யத் தேவை என்றும், எவ்வளவு நேரம் சந்தை ஆய்வுக்காக ஒதுக்கப்பட வேண்டும் எனவும் முடிவு செய்ய வேண்டும்.



உதாரணமாக புதிதாக ஊறுகாய் தொழிலை ஆரம்பிக்க விரும்புகின்றீர்கள் என வைத்துக்கொள்வோம். இந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்பே இந்தப் புதிய ஊறுகாய்க்கு சந்தையின் வரவேற்பு எப்படி இருக்கும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்காய் ஊறுகாய் தயாரிக்க வேண்டுமா? பூண்டு ஊறுகாய் தயாரிக்க வேண்டுமா? எலுமிச்சை ஊறுகாயா? நார்த்தங்காய் ஊறுகாயா? என முதலில் முடிவு செய்ய இந்த சந்தை ஆய்வுதான் உதவியாய் அமையும்.

மேலும் சந்தையில் என்னென்ன ஊறுகாய்கள் உள்ளன? எந்த பிராண்ட் ஊறுகாய்க்கு அதிக வரவேற்பு உள்ளது? ஏன் இந்த வரவேற்பு? போட்டியாளர்கள் எந்த நிலையில் உள்ளார்கள்? அவர்களின் வியாபார நுணுக்கம் என்ன? ஊறுகாய் வாங்குவோர் யார்? அவர்கள் மனநிலை என்ன? அவர்களின் பழக்கவழக்கம் எந்தவகையில் அமைகிறது? ஊறுகாய் வாங்குவோரின் பொருளாதார நிலை என்ன? பாட்டிலில் ஊறுகாய் நல்லதா? அல்லது பிளாஸ்டிக் பையில் வைக்கப்பட்ட ஊறுகாய் தேவையா? என அனைத்து விபரங்களையும் தெரிந்து கொள்ள சந்தை ஆய்வு உதவும்.

சந்தை ஆய்வை முறைப்படி ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சில முக்கிய கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு சந்தை ஆய்வுகள் செய்து அந்த ஆய்வுகளின் அடிப்படையில் தொழில் முடிவுகள் எடுப்பது நல்லது.

சந்தை ஆய்வுக்குச் செல்லும் முன்பு பல கேள்விகளை உருவாக்கி அதனை முறைப்படுத்தி அச்சிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். அச்சிடப்பட்ட கேள்வித்தாளில் (Questionnaire) பதில் எழுதவும் போதிய இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக கேள்விகளை மூலப்பொருள், எந்திரங்கள், சந்தை என்று பிரிவுகளாகப் பிரித்துக் கொள்வது சிறந்தது.

மூலப்பொருள் சம்பந்தப்பட்ட தகவல்களை சேகரிக்க பல கேள்விகள் அமைக்கப்பட வேண்டும். எந்தெந்த மூலப்பொருட்கள் தேவைப்படுகின்றன? மூலப்பொருள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் யார்? ஆர்டர் கொடுத்து எத்தனை நாட்கள் கழித்தபின் மூலபொருளை அனுப்புவார்கள், மூலப்பொருளுக்கான வரி, பணம் செலுத்தும் முறை, மூலப்பொருள் விலை குறைந்தபட்சமாக ஆர்டர் கொடுக்க வேண்டிய அளவு, அரசாங்க முடிவுகள் மூலப்பொருள் கிடைப்பதைப் பாதிக்குமா? மூலப்பொருள் விலை மாற்றம் எப்போதெல்லாம் நிகழ்ந்துள்ளது? மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்படுமா? தட்டுப்பாட்டைச் சமாளிப்பது எப்படி? போன்றவை சில அடிப்படைக் கேள்விகள். இதனை நெறிப்படுத்தி அமைத்து பதில் பெறுவது நல்லது.

இயந்திரங்கள் சம்பந்தமான செய்திகள் சேகரிக்க இயந்திர உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், இயந்திரத்திறன் (Capacity) பிராண்ட் விலை, வரி விதிப்பு, போக்குவரத்துச் செலவு, இயந்திரம் இயக்கத் தேவையான மின் பொருட்கள் (Electricals), எந்திரப் பழுதுகள், பழுது நீக்க ஆகும் செலவு, இயந்திர ஆர்டரின் போது செலுத்த வேண்டிய பணம், இயந்திரம் கொண்டுவர ஆகும் செலவு, இயந்திரம் நிறுவத் தேவைப்படும் இடம், எந்தவகையான பொருட்களை இந்த இயந்திரத்தால் உற்பத்தி செய்ய இயலும் என்பன போன்றவற்றில் கவனம் செலுத்தினால் போதும்.

பொதுவாக இத்தகைய தகவல்களை போட்டியாளர்கள் அல்லது போட்டி நிறுவனங்களில் பணிபுரிபவர்களிடம் பெறலாம். இயந்திர உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், மூலப்பொருள் உற்பத்தியாளர்கள் ஆகியோரும் இயந்திரம் பற்றி அனைத்துத் தகவல்களையும் தர வாய்ப்புள்ளது.

சந்தை பற்றி தெரிந்து கொள்ள போட்டி உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோரிடம் தொடர்பு கொள்வது அவசியமாகும். உற்பத்தியாளர்களிடம் தொழிற்சாலை அமைப்பு, இடத்தேவை, வியாபார விதிமுறைகள் (Business Terms) எதிர்காலத் திட்டம், விரிவாக்கத்திட்டம், (Expansion) பன்முகப்படுத்துதல் (Diversification), தொழில்நுட்பத்திறமை, (Technical Skill) நிதி வசதி, சந்தை பரப்பு (Market Area) தொழில் பிரச்சினைகள் போன்ற செய்திகளை சேகரிக்க வேண்டும்?

விற்பனையாளர்களிடம் (Traders) வியாபார விதிமுறைகள், ஆண்டு விற்பனை, சந்தைப் பரப்பு, எதிர்கால வியாபார நிலை, புதிய பொருட்களை அறிமுகப்படுத்தும்முறை, உற்பத்தியாளர் விற்பனையாளர் உறவுமுறை போன்ற தகவல்களைத் திரட்டலாம்.

வாடிக்கையாளர்கள் (Customers) தான் பெரும்பாலும் நுகர்வோர்களாக இருப்பதால் அவர்களிடம் ஓராண்டுத் தேவை என்ன? எந்த பிராண்டை அதிகம் விரும்புகிறார்கள்? விலை, தரம், பணம் செலுத்தும் முறை, இதில் எதற்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள்? இப்போது சந்தையிலிருக்கும் பொருட்கள் திருப்திகரமாக இருக்கிறதா? இந்தப் பொருளை யாரிடமிருந்து பெறுகிறார்கள்?

நாள்தோறும் வாங்குகிறார்களா? வாரம் மாதம்தோறும் வாங்குகிறார்களா? வருங்காலத்தில் எவ்வளவு அதிகப் பொருட்களை வாங்குவார்கள்? குறிப்பிட்ட காலத்தில் (வாரம் அல்லது மாதம்) எவ்வளவு பொருட்கள் வாங்குகிறார்கள்? வாடிக்கையாளர்களின் வாங்கும் சக்தி எந்த அளவுக்கு அமைந்துள்ளது? போன்ற கேள்விகளுக்கான விடைகள் வாடிக்கையாளர்களின் விருப்பத்தைப் படம்பிடித்துக் காட்டும்.


வாடிக்கையாளர்களின் மனம் அறிந்து செயல்படும் விதத்தைப் புரிந்து எதிர்பார்ப்புக்களை கணித்து அவர்களின் தேவைக்கு ஏற்ப பொருட்களை உற்பத்தி செய்ய சந்தை ஆய்வு ஓர் அடித்தளம் ஆகும். இளம் தொழில் முனைவோர் இதனைக் கருத்திற் கொண்டு தொழிலை ஆரம்பிப்பதே நல்லது.

*தொழில் மலரிலிருந்து – செல்வி ஜனார்த்தனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த வட்டியில் விவசாயக் கடன்



10,000/= (பத்தாயிரம் ரூபா) முதல் 12,000,000/= (ஒரு கோடி இருபது இலட்சம் ரூபா) வரை

| | |
|---|---|
| மிளகு<br>கோப்பி<br>கொக்கோ<br>கறுவா<br>ஏலம் | பயிரிடுவோர்<br>முயற்சியாளர்<br>ஏற்றுமதியாளர்<br>வியாபாரிக்கு |

A. இக்கடனைப் பெற்றுக் கொள்பவர்கள் யார்?

B. நீங்கள் இக்கடனை பெற எவ்வாறு விண்ணப்பிக்கலாம்?

C. விண்ணப்பப் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, வங்கியில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் நடப்பதென்ன?

D. நீங்கள் பெறும் கடனை எவ்வாறு திரும்பச் செலுத்துவது?

E. நீங்கள் இக்கடனைப் பெற்றுக் கொள்வதற்காக நிறைவேற்ற வேண்டியது என்ன?

**விபரங்களுக்கு:**

பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்,
1095, கண்டி வீதி, பேராதனை.
T.P. / Fax : 08-388362

இக்கடன் சம்பந்தமான ஆலோசனைகளை "லங்கா டுடே" இன் தாய் நிறுவனமான WORLDWIDE CONSULTANT SERVICES வழங்கும்.

ஆசிரியர்.

## ஏற்றுமதி விவசாய உற்பத்திக்கான கடன் உதவி வழங்கல்

### கடன் திட்டம் என்றால் என்ன?

ஏற்றுமதிக்கான விவசாயப் பயிர்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள விஷேட ஒதுக்கீட்டின்கீழ் மத்திய, பாரிய அளவிலான முதலீட்டாளர்களுக்காக கீழே அட்டவணையில் காட்டியுள்ளபடி, அவற்றில் ஒன்றினையோ பலவற்றையோ மேற்கொள்வதற்காக இந்தக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் தேசிய அபிவிருத்தி வங்கி மூலம் அல்லது DFCC வங்கி மூலம் கடன் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இக்கடன் வழங்குவதற்காக தெரிவு செய்த விடயம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை மூலமே செயற்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்திட்டத்திற்கான ஆரம்ப வாய்ப்புகளை எவ்வாறு பெற்றுக்கொடுக்க முடியும்?

* இத்திட்டத்திற்கான முழுச் செலவில் 25% னை விண்ணப்பதாரியினால் முதலிடப்பட வேண்டும். திட்டமிடப்பட்ட முழு முதலீட்டிலும் 25% முதல் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் 8% வட்டியினடிப்படையில் வழங்கப்படும்.
* எஞ்சிய 50% முதலும் 14% வட்டியினடிப்படையில் தேசிய அபிவிருத்தி வங்கியினால் அல்லது DFCC வங்கியினால் பெற்றுக் கொடுக்கப்படும்.
* ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் விவசாயக் கடனாக இச்செயற்திட்டத்துக்காக பெற்றுக் கொடுக்கப்படும் மான்ய உதவி வட்டியின்றி முழுக் கடன் தொகையிலிருந்து கழிக்கப்படும்.

## இக்கடனைப் பெற்றுக் கொடுப்பவர்கள் யார்?

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் அறிவுறுத்தலின்கீழ் தேசிய அபிவிருத்தி வங்கியினாலும் DFCC (இதன் பின்னர் வங்கி என அறிமுகப்படுத்தப்படும்) நிறுவனத்தால் கடன் தொகை பெற்றுத் தரப்படும்.

## இக்கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான பொருத்தமான செயற்திட்டங்களும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ட்டக் கடன் தொகையின் அளவு.

| இக்கடன் திட்டத்தின்கீழ் கடன் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான செயற் திட்டங்கள் | 8% வட்டிக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்மட்டக் கடன் அளவு (அதாவது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் முழு முதலீட்டில் 25% ஆகும்) | 14% வட்டிக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய உயர் மட்ட கடன் அளவு (அதவது வங்கியால் பெற்றுக் கொடுக்கப்படுவது முழுத் திட்டத்தின் 50% அளவாகும்) | முழுக் கடன் அளவு மிலியன் ரூபாவில் |
|---|---|---|---|
| 1. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிறிய, மத்தி அளவிலான திட்டத்தைச் செயற்படுத் துவதற்காக | 3 மில்லியன் ரூபா | 6 மில்லியன் ரூபா | 9 |
| 2. வர்த்தக நாற்றுமேடை தயாரித்து அதன் அபவிருத்திக்கா | 3 மில்லியன் ரூபா | 6 மில்லியன் ரூபா | 9 |
| 3. பாரிய அளவிலான தோட்டக் கைத் தொழிலுக்காக | 4 மில்லியன் ரூபா | 8 மில்லியன் ரூபா | 12 |
| 4. தற்பொதுள்ள பயிர்களைத் தயாரிப் பதில் வசதிகளை நவீனமயமாக்கல் கடன் திட்டம் | 4 மில்லியன் ரூபா | 8 மில்லியன் ரூபா | 12 |
| 5. தயாரிப்பதிலும் விற்பனை செயற் பாட்டிற்காக அடிப்படை வசதி களைச் செய்வதற்காக | 4 மில்லியன் ரூபா | 8 மில்லியன் ரூபா | 12 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் இக்கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள எவ்வாறு விண்ணப்பிக்கலாம்? அதன்பின் நடைபெறுவதென்ன?

1. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திலிருந்தும் மாவட்ட காரியாலயங்களிலிருந்தும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. விண்ணப்பதாரியின் விண்ணப்பம் கிடைத்தபின்னர் அதிகாரிகள் குழு ஒன்றினால் திட்டத்திற்கான தொழில்நுட்பத் தகுதி பற்றி ஆராயப்படும். அக்குழுவினர் தகுதி பற்றிய நற்சான்றிதழ் அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பர்.
3. விண்ணப்பப்படிவம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் அபிவிருத்திப் பகுதியில் பதியப்படுவதோடு பின்வருமானதொரு விபரங்களைக் கொண்ட தீர்மானங்களைத் தயாரிக்குட படி விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.
   - I. செயற்திட்டத்தின் விபரம்
   - II. செயற்திட்டத்திற்கான முழுச் செலவும், திட்ட காலத்திற்குள் செலவு பங்கிடப்படும் வழிமுறைகள்.
   - III. விண்ணப்பிக்கக்கூடிய கடன் தொகை அளவு.
4. ஒவ்வொரு செயலுக்குமேற்ப பொருத்தமான அதிகாரிகள் குழுவில் செயற்திட்ட அறிக்கை பரிசீலிக்கப்பட்டு தொழில்நுட்பத் தீர்மானங்களும் வழங்கப்படும்.
5. குறிப்பிட்ட தொழில்நுட்ப விபரங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்பு, செயற்திட்ட அறிக்கை, ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் பொருளாதார விஞ்ஞான ஆய்வு அலகினுள் பின்வரும் காரணங்களுக்குப் பொருத்தமான மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.
   - I. ஆலோசனையின் முதல் பங்கீடு
   - II. ஆலோசனைகளின் பொருளாதாரத் தகுதி.
   - III. குறிப்பிட்ட வட்டி விகிதத்திற்கேற்ப கடனை திருப்பிச் செலுத்தும் தகுதி.
6. இந்த மதிப்பீட்டு அறிக்கையை செயற்திட்ட ஆலோசனைகளுடன் கடன் தொகையை அளிப்பதற்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் சான்று பகர்வேடு தேசிய அபிவிருத்தி வங்கி அல்லது DFCC வங்கியிடம் ஒப்படைக்கப்படும்.
7. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் செயற்திட்ட ஆலோசனைகளைத் தயாரிப்பதில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் உதவி பெற்றுத் தரப்படும்.

## விண்ணப்பப் பத்திரம் வங்கியில் ஒப்படைக்கப்பட்ட பின்பு நடப்பதென்ன?

1. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் சான்று வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவம் மாத்திரம் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. முதலீட்டாளருக்கு கடன் பெற்றுக் கொள்வதற்கான தகுதி, பின்னர் அதனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தகுதி என்பன வங்கியினால் மதிப்பீடு செய்யப்பட்டு அதன்படி கடன் வழங்களும் மீளப்பெறலுமான திட்டம் தயாரிக்கப்படும். கடன் வழங்களுக்கும் மீளப் பெறலுக்குமாக வங்கியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட வேண்டியிருக்கும்.
3. முதலீட்டாளர்கள் இச்சட்டதிட்டங்கட்கு உடன்படுவாரேயானால் அவரால் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ள படிவத்திலும் முதலீட்டு அபிவிருத்தி ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படும். அதில் கீழ்வருவன உட்பட்டிருக்கும்.
   - I. குறிப்பிட்ட செயல் ஆரம்பிக்கும் திகதி.
   - II. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழில்நுட்ப உதிவுகள்.
   - III. செயற்திட்டம் ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான காலம்.
4. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மூலம் முதலீட்டுக்கு குறிப்பிட்ட செயலை ஆரம்பிப்பதற்கான விபரங்கள் அளிக்கப்படுவதோடு மாவட்ட ஏற்றுமதி விவசாய உதவிப் பணிப்பாளர் மூலம் குறிப்பிட்ட மற்றும் உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த உதவி வழங்குவதற்கு முன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மூலம் பரிசீலிக்கப்பட்டு உதவி வழங்குவதற்கான சான்று பகிரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் பெற்றுக் கொள்ளும் கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது?

கடனை மீளப்பெறும் பொறுப்பு தேசிய அபிவிருத்தி வங்கியினதும் DFCC வங்கியினதும் ஆகும்.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தால் கிடைக்கப்பெறும் கடன் சலுகைக்கான வட்டி வீதம் 8% ஆகும். வங்கி மூலம் கிடைக்கப்பெறும் கடனுக்கான வட்டி விகிதம் * 14% ஆகும் (வருடம்)

ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தி செயற்திட்டமாயின் கடன் மீளச்செலுத்தப்படும் காலம் மிகக்கூடியது 10 வருடங்கள். இதற்கான மற்றைய உதவிக்காலமாக 5 வருடங்கள் வழங்கப்படும். இக்காலத்துள் முதல் இரு வருடத்திலும் மீளப்பெற வேண்டிய வட்டியின் அளவு அக்காலத்துக்குள் செலுத்தாது 3ம் வருடம் முதல் செலுத்துவதற்கு ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ஏனைய செயல்களுக்காக மீளச் செலுத்தும் காலம் ஆகக்கூடியது 5 வருடங்களாகும். மற்றைய உதவிக்காலம் 2 வருடங்களாயிருப்பதோடு அக்காலத்துக்குள் வட்டியைச் செலுத்தாது 3ம் வருடம் முதல் அதனைச் செலுத்தக்கூடிய ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

* வங்கியின் தீர்மானப்படி வட்டிவீதம் 14% லிருந்து குறைக்கப்படலாம்

## இந்தக் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக நீங்கள் நிறைவேற்ற வேண்டியது யாவை?

கடன் தொகைப் பெற்றுக்கொள்ளும் திட்டம் தொழில்நுட்பம், தகுதி கொண்டதாக, பொருளாதார பெறுமதி மிக்கதாக, சூழல் பிடித்தமானதாக அமையக்கூடியதான ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், இந்நிலைமைகட்காக உங்களுக்காக பரிசீலனை மேற்கொள்ளும்.

தேவையான வங்கி ஒப்பந்தங்கள் முதலியன.

தங்களுக்குக் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக தகுதியும் மீளச் செலுத்துவதற்கான தகுதியும்.

## இக்கடன் திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய மேற்பார்வை

ஒரு நோக்கில் ஏற்றுமதி விவசாயத் திணைக்கள அபிவிருத்திப்பகுதி, விளைவின் பின்னரான ஆலோசனைகளை அலகு, பொருளாதார ஆராய்ச்சி அலகு, (ஸ்ரீ லங்கா ஏற்றுமதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் ஸ்ரீ லங்கா தரக் கட்டுப்பாட்டு செயற்பகுதி குறிப்பிட்ட இடத்தில் மாத்திரம்) கடன் திட்டத்தில் முன்னேற்றம் பற்றி மதிப்பீடு மேற்கொள்வதற்கு பரிபாலன நடவடிக்கைகள் மேற்கொள்வதாகும். மற்றொருவகையில் வங்கி மூலம் முதலிடப்படும் பணம் வெற்றிகரமாக மீளல் எனும் ஆர்வத்துடன் மேற்பார்வை. பணியையும் மேற்கொள்ளும். இந்த முன்னேற்ற பரிபாலன செயல் மேற்கொள்ளப்படுவதற்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் மூலம் முன்னேற்றப்படியின் படிவம் ஆறுமாதத்திற்கொருமுறை முதலீட்டாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

## இக்கடனைப் பெற்றுக்கொள்ள எவ்வாறு விண்ணப்பிக்கலாம்?

1. முதலில் இக்கடன் திட்டம் உங்கள் வருமானத்தை அதிகரிப்பதற்காக துணைபுரியக்கூடிய ஒன்றை மாதிரி கொள்ளல்.
2. இல. 1095, கண்டி வீதி, பேராதனையில் அமைந்துள்ள ஏற்றுமதி விவசாயத் திணைக்களப் பிரதான காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். (T.P. : 08-388651, 08-388362) அல்லது ஏற்றுமதி விவசாயத்திற்கான மாவட்ட காரியாலயத்தில் விசாரிக்கவும்.
3. விண்ணப்பப்படிவம் ஒன்றினைப் பெற்று மிகக் கவனமாக நிரப்பவும்.
4. பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

   ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்,<br>
   1095, கண்டி வீதி,<br>
   கடம்பே,<br>
   பேராதனை.

5. கடித உரையின் இடது பக்க மேல்மூலையில் "கடன் உதவி செயற்திட்டத்துக்கான விண்ணப்ப படிவம்" என குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பப் படிவம்

### ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

### தேசிய அபிவிருத்தி வங்கியும் DFCC நிறுவனம் என்பனவற்றுடன் இணைந்து செயற்படுத்தும் கடன் திட்டம்

1.1 விண்ணப்பதாரியின் பெயர் :

1.2 விலாசம் :

2. கடன் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் செயற்திட்டம் (அடைப்புக்குள் X குறியிடுக)

| | | | |
|---|---|---|---|
| 2.1 | சிறிய, மத்தி அளவிலான ஏ.வி. பயிர்ச்செய்கை | CUL | |
| 2.2 | வர்த்தக அளவில் ஏ.வி. பயிர் நாட்டுமேடை அமைத்தல் | NUR | |
| 2.3 | ஏ.வி. பயிர் உற்பத்தி செயலில் வசதிகளை நவீனப்படுத்தல் | PHP | |
| 2.4 | பாரிய அளவிலான ஏ.வி. பயிர்ச்செய்கை | FST | |
| 2.5 | தயாரிப்பும் விற்பனைச் செய்பாடு | MRK | |

3. வர்த்தக நிலையத்தின் விபரம்

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | பயிர்செய்கை நிலையம் | கிராமசேவை அலுவலாளர் செயலகம் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

4. கடன் பெறும் திட்டம் பற்றிய விபரம் (குறிப்பிட்ட கூட்டினைத் தெரிவு செய்து விபரம் தரவும்.

| சிறிய, மத்திய, பாரிய அளவிலான ஏற்றுமதி வியாபாரப் பயிர்ச் செய்கை (CUL/EST) | | வர்த்தக மட்டத்திலான நாற்றுமேடை அமைத்தலும் அபிவிருத்தியும் (NUR) | |
|---|---|---|---|
| பயிர் | | கன்று வகை | எண்ணிக்கை |
| தீர்மானித்த செய்கைப் பரப்பளவு | | 1 | |
| செய்கை முறை, நவீன / மீளவும் / புணரமைப்பு | | 2 | |
| கலப்புச் செய்கையா? தனிச் செய்கையா? | | 3 | |
| கலப்புச் செய்கையாயின், | | கடன் தொகையைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் பண்டங்கள் | |
| பயிர் | கன்று எண்ணிக்கை | பொருள் | எண்ணிக்கை |
| 1 | | 1 | |
| 2 | | 2 | |
| 3 | | 3 | |
| 4 | | ஆரம்பிக்க எதிர்பார்க்கும் திகதி | |

| விளைச்சல் வசதிகளை நவீன மயமாக்கல் (PHP) | | தயாரிப்பும் விற்பனைச் செயற்பாடும் (MRK) | |
|---|---|---|---|
| கடனால் எதிர்பார்க்கும் வசதிகளின் வகை | | கடன் எதிர்பார்க்கப்படும் திட்டம் | |
| தயாரிக்கப்படும் ஏற்றுமதி விவசாயப் பயிர் | | கடனை முதலிட எதிர்பார்க்கும் செயல்கள் | |
| எதிர்பார்க்கப்படும் வருடாந்த தயாரிப்பு அறிக்கை, பயிர் வகைப்படி | kg | 1 | |
| 1 | | 2 | |
| 2 | | 3 | |
| 3 | | 4 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கடன் பெற்று செயற்படுத்தப்படும் திட்டம் தொடர்பாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் அடிப்படை உதவி பெற்றுக் கொண்டிருப்பின் பின்வரும் விபரங்களைத் தரவும்.

| | |
|---|---|
| செயல் | |
| உதவி விண்ணப்பித்த திகதி | |
| பதிவிலக்கம் | |
| பெற்றுக் கொள்ளப்பட்ட உதவியின் அளவு (ரூபா) | |
| குறிப்பிட்ட செயற்திட்டத்தின் நிகழ்காலத் தன்மை | |

6. திட்டமிடப்பட்ட நிலையத்திற்கும், பிரதான நகரத்திற்கும் இடையான போக்குவரத்து வழியினைத் தெளிவுபடுத்துக.

7. தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு இச்செயலுக்குமான எதிர்பார்க்கப்படும் கடன் ஒதுக்கீட்டு அளவுகளை கீழ்வரும் அட்டவணையில் காட்டுக.
(கடன் அதற்கான வட்டி விகிதம் பற்றிய விபரம், விபரக் கொத்தில் அடங்கியிருக்கும்)

| கடன் எதிர்பார்க்கப்படும் செயல்கள் | தீர்மானிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை (ரூபா) |
|---|---|
| 1. சிறிய, மத்திய அளவிலான ஏற்றுமதி விவசாயப் பயிர்செய்கை | |
| 2. வர்த்தக மட்டத்திலான ஏற்றுமதி விவசாய நாட்டுமேடை அமைத்தல் | |
| 3. ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தி வசதிகளை நவீனமயப்படுத்தல். | |
| 4. பாரிய அளவிலான ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை. | |
| 5. தயாரிப்பும் விற்பனைச் செயற்பாடும். | |

8. திட்டமிடப்பட்ட செயலுக்காக உங்கள் அடிப்படை முதலீடு (ரூபா)

9. எதிர்பார்க்கப்படும் கடன் தொகைக்காக குறிப்பிட்ட திட்டத் தீர்மானம் முன்வைக்க எதிர்பார்க்கப்படும் திகதி.

மேலே என்னால சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் நான் அறிந்தவகையில் உண்மையானதும் பிழையற்றதுமென உறுதிப்படுத்துகின்றேன். ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு இக்கடன் தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, அறிமுகப்படுத்தக்கூடிய எல்லா சட்டதிட்டங்களுக்கும் ஒத்துக் கொள்கின்றேன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றேன்.

திகதி ............................

........................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்


1ம் அட்டவணை விளைச்சலின் பின்னரான தயாரிப்புக்கான புதிய உதவித் திட்டம் - 1998

| தூய்மைப்படுத்தும் சேவை | தீர்மானிக்கப்பட்ட உதவித்தொகை (ரூபா) | அடிப்படைத் தேவைகள் |
|---|---|---|
| மிளகு | | |
| விதை வேறுபடுத்தல் | 10,000 | |
| தரப்படுத்தல் | 5,000 | |
| பிளான்சர் | 8,000 | |
| கோப்பி | | |
| கைகளினால் இயக்கல் Palper | 5,000 | |
| Palper மோட்டருடன் கூடியது | 10,000 | |
| ஹலர் (Huller) | 20,000 | |
| கொக்கோ | | |
| கொதிக்கவைத்தல் - சிறிய | 10,000 | |
| பெரிய | 20,000 | |
| கறுவா | | |
| நவீன உலர்த்தல் - சிறிய | 25,000 | |
| பெரிய | 50,000 | |
| மறுசீரமைத்தல் / அபிவிருத்தி செய்தல் | 50,000 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| எண்ணெய் பெறல்<br>நவீன அலகு<br>மறுசீராக்கப்பட்டது / அபிவிருத்தி செய்யப்பட்டது | 40,000<br>40,000 ஆகக்கூடியது | |
| வாசனை எண்ணெய் பெறல்<br>நவீன அலகு<br>மறுசீரமைக்கப்பட்டது / அபிவிருத்தி செய்யப்பட்டது | 50,000<br>50,000 ஆகக்கூடியது | |
| உலர்த்தும் கருவி | 15,000 ஆகக்கூடியது | |
| உலர்த்தல்<br>விறகு / சூரிய வெப்பம்<br>மின்பாவனை<br>டீசல், மண்ணெண்ணெய் | 25,000<br>50,000<br>100,000 | |
| தயாரிப்பு – இடம் (அறை) | 10,000 | |
| தயாரிப்பு நிலையத்தை அபிவிருத்தி செய்தல்<br>கோப்பி<br>கறுவா<br>கொக்கோ | 100,000<br>100,000<br>100,000 | |
| கராம்பு தயாரித்தல்<br>வேறும் தயாரிப்புக்கள் | 300,000<br>200,000 | |



## முடியும் என்றால் முடிக்க வழியுண்டு!

திட்டத்தை வரையும் நேரத்தில் அதைச் செயற்படுத்த ஆரம்பிக்கும்போது ஊக்கம் வழங்குபவர்களையே சூழலாக வைத்துக் கொள்ள வேண்டும்.

செய்து முடிக்க முடியும் என்ற நமது எண்ணத்திற்கு உரம் ஊட்டுபவர்களையே நாட வேண்டும்.

ஆனால், பலர் இதெல்லாம் முடியாத ஒன்று. உனக்கு எதற்கு இந்த ஆசை என்றெல்லாம் பேசுவார்கள்.

அவர்களிடம் நட்பை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும்.

அவர்கள் சொற்கள் நம்மை பலஹீனமாக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நம் அகக்காட்சியில் நாம் அடையப்போகும் வெற்றிகள், நம் இலக்கு, நமது திட்டம், நமது செழிப்பான எதிர்காலத்தை உருவாக்கப் போகும் நமது குறிக்கோள் முக்கிய இடத்தைப் பெற வேண்டும்.


தோல்வி மனப்பான்மையுள்ளவர்களின் பேச்சு, முடியாது என்ற எண்ணத்திலேயே நீந்துபவர்களை எல்லாம் நமது இலட்சியத்திற்கு ஆலோசகர்களாக ஆக்கிவிடக்கூடாது.

என்னால் முடியும் என்பவனே ஆக்கச் சக்தியுள்ளவன்! முடியாது என்பவனுக்கு ஒரு சக்தியும் கிடையாது.

*உயர் தொழில் 1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இதில் உள்ள பாதனி வகைகளை குறைந்த விலையில் "Bangkok" ல் இருந்து மொத்தமாக இறக்குமதி செய்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு Mr. K.T. Tel: 01 - 877991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 நம் நாட்டு பெட்டை ஆடுகளுடன் ஒரு ஜமுனாபாரி ஆட்டை கலந்து விடுங்கள் நாளாக நாளாக கை மேல் பலன். இரட்டை லாபம்.





10,000/= பெறுமதியான Ecostat அடைகாக்கும் கருவியில் உருவான செழிப்பான இறைச்சிக் கோழி

ஜேர்மன் பொயர். மாட்டுக்கு போட்டியாக வளரக் கூடியது. இறைச்சியை தாராளமாக வழங்கக்கூடியது



PRINTED BY MASTERCRAFT-MAWANELLA. TEL :035-47180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org